# சாளரம்

விலை 15/-

மே - ஜூன் 1995

மாநகர சபை
யாழ்ப்பாணம்



# வசந்தம் மொத்த விற்பனை நிலையம்

தங்களுக்குத் தேவையான
பலசரக்குப் பொருட்களை
ஒரே இடத்தில் கொள்வனவுசெய்ய
நீங்கள் ஞாபகம் வைத்திருக்க
வேண்டிய நிறுவனம்



வசந்தம்

## வசந்தம் மொத்த விற்பனை நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி

# இந்த இதழில்

- ☐ வசந்தராஜாவின் இராஜினாமா சொல்லும் கதை என்ன?
- ☐ 'மோனலிசா' புகழ் லியோநாடோ டாவின்சி
- ☐ புவியினுள்ளே இருப்பது என்ன?
- ☐ வண்ணத்துப் பூச்சியிடமிருந்து ஒருபாடம்
- ☐ விற்றமின்கள்
- ☐ மது அருந்தும் பழக்கம் மனநோயாக மாறுகிறது
- கால மாற்றம் — 'நிலாமுற்றம்'

நாம், ஒன்றுபட்ட மக்களாக, ஒரே தேசிய சக்தியாக அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும். மலைபோல உறுதியுடன் நாம் ஒன்று குவிந்து நின்றால், எம்மை எத்தகைய சக்தியாலும் அழித்து விடமுடியாது.

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன்

உங்கள் கவிதைக்கான படம்



# புதிய ஆட்சியும் பழைய அனுபவங்களும்

தமிழீழம் மீதான பெரும் போர் ஒன்றிற்கு ஸ்ரீலங்கா அரசு தயாராகி வருகிறது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளப் புதிய திட்டமொன்று வகுக்கப்பட்டிருப்பதாகவும், அது இரகசியமானது எனவும் அரசாங்கம் தனது தொடர்புச் சாதனங்களூடாக அறிவித்து வருகிறது.

இந்தியா, அமெரிக்கா பிரான்ஸ், இஸ்ரேல் போன்ற நாடுகளிட மிருந்து ஆயுத உதவிகள், ஆலோசனைகள், பயிற்சிகள் என்பன பெறறுக்கொள்ளப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை, தமிழ்மக்களுக்கு நியாயமானதோர் அரசியல் தீர்வினை வழங்குவதற்கான திட்டங்களையும் வகுத்து வருவதாக அரசு அறிவிக் கிறது. இந்தத் தீர்வுத்திட்டம் முழுமையாக வரையப்படாத ஒரு வேளையில், அது சம்பந்தமான கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொள் வதற்காகக் கொழும்பிலுள்ள தமிழ்க்கட்சிகளை அரசாங்கம் சந்தித்தும் உள்ளது. தமிழ்க் கட்சிகளினதும், குழுக்களினதும் ஆதரவைப் பெற வும், அரசின் தீர்வுத்திட்டத்தை அவை ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வும் சனாதிபதி சந்திரிகா மிகவும் முனைப்புக்காட்டுகின்றார்.

தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் ''நியாயமான நிலைப் பாட்டை,'' சகல தமிழ் அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஆனால், விடுதலைப் புலிகள் மட்டுமே இதற்கு எதிராக நிற்கின்றனர் என்ற பிரசாரத்தை உலகின் காதுகளுக்கு உரத்துக்கூவி, உதவிகளையும், அனுதாபங்களையும் பெற்றுக்கொள்வதான தந்திரமே இது.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக வெல்ல முடியாத யுத்த அனுபவங் கள் காரணமாக, யுத்தம் வேண்டாம் அமைதியே வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து,சந்திரிகாவை ஆட்சிப்பீடத்திலேற்றியசிங் கள மக்களுக்கு, 'போரில் சர்வதேச உதவி' என்ற கவர்ச்சியான சுலோகத்தைக்காட்டி நம்பிக்கையூட்டலாம் எனவும் சந்திரிகா அரசு எண்ணுகிறது.

அரசின் இந்த நிலைப்பாடுகள் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் எவ்விதச் சலனத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில், இந்தத் திட்டங் கள், தந்திரங்கள், பிரசார உத்திகள் எல்லாம் தமிழரின்போராட்ட அனுபவத்தில் புதியன அல்ல. முன்னைய சிங்கள ஆட்சியாளர்கள் செய்தவற்றைத்தான் புதிய அரசும் செய்கிறது என்பது தமிழ் மக் களுக்குப் புரியும்.

முன்னையவர்கள் படித்த அதே பாடங்களையே, இந்த அரசும் இதனூடாகப் படிக்கப்போகிறது என்பதுதான் உண்மை!

# வசந்தராஜாவின் இராஜினாமா சொல்லும் கதை என்ன?

— சாரணன் —

திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க விஜயகுமாரதுங்க பதவிக்கு வந்ததும் திரு. வசந்தராஜாவை ''ரூபவாஹினிக்'' கூட்டுத்தாபனத்திற்குத் தலைவராய் நியமித்தமை அனைவரும் அறிந்ததே. அவ்வாறே, அவர் தற்போது ராஜினாமாச் செய்துள்ளமையும் அனைவரும் அறிந்ததே.

வசந்தராஜாவின் இந்த நியமனத்திலும் ராஜினாமாவிலும் சிங்கள இனவாதத்தின் முழுவரலாறும் தொக்குநிற்கிறது; சந்திரிகாவின் முழுவரலாறும் தொக்குநிற்கிறது.

வெகுஜனத் தொடர்புச் சாதனத்தைச் சுதந்திரமாக்கும் முதல் நடவடிக்கை என்றும், இனவாதமற்றவெகுஜனத் தொடர்புச் சாதனத்திற்கான முதல் தொடக்கம் என்றும், வசந்தராஜாவின் நியமனத்தைப்பற்றி வானளாவப் புகழும் கருத்துக்கள் சந்திரிகாவின் கழுத்தில் மாலைகளாயின.

ஆனால் வசந்தராஜாவின் ராஜினாமாவானது தராசின் முள்ளைத் தலை கீழாய்க் காட்டியது. ஆயினும், சந்திரிகா மீது நம்பிக்கை வைத்தவர்களுக்கு அவரின் ராஜினாமாக்கூட உண்மைகளை உணர்த்தவில்லை.

இராஜினாமாவைத் தொடர்ந்து, வசந்தராஜா ஓர் இரகசியத்தை இரத்தமும் தசையுமாய் அவிழ்த்துவிட்டார். சந்திரிகாவின் மீது அப்பாவித்தனமாக நம்பிக்கை கொண்டவர்களுக்கு, வசந்தராஜா கொடுத்த கருத்து அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்திருக்கலாம். ஆனால் விழிப்புள்ள தமிழ் மக்களின் முகங்களில் ஏளனச் சிரிப்பைத் தோற்றுவித்தது என்பதில் ஐயமில்லை.

இதுதான் வசந்தராஜா வெளியிட்ட இரகசியம். வசந்தராஜாவிற்கு சந்திரிகா நியமனம் வழங்கும்போது, சந்திரிகா அவரிடம் பின்வருமாறு கூறினாராம். புலிகளுடனான பேச்சுவார்த்தையின் முக்கிய நோக்கம், ''தமிழ் மக்களிடம் இருந்து புலிகளை அந்நியப்படுத்துவதுதான்'' என்றாராம். இதற்கு ஏற்பவே, வசந்த

ராஜா 'ரூபவாஹினி'யைப் பயன்படுத்த வேண்டும் என்பது சந்திரிகாவின் எதிர்பார்க்கையாய் அமைந்தது. சந்திரிகாவின் இந்த உள்நோக்கத்தைத் தெரிந்துகொண்டும், அவரின் அறிவுறுத்தல்களைக் கேட்டுக்கொண்டும், அந்த நியமனத்தை ஏற்று இரகசியத்தை வெளியிடாத வசந்தராஜாவின் நேர்மை நிச்சயமாகச் சந்தேத்திற்கு உரியதுதான். ஆயினும், அவர் இப்போதாவது ராஜினாமாச் செய்ததுடன், இந்த இரகசியத்தை வெளியிட்டமை சற்றுஆறுதல் அளிக்கக்கூடிய செய்தியே.

சந்திரிகாவின்வேஷத்தை அவரின் நண்பர் இப்படிக் கலைத்துவிட்டிருக்கும்போது, சந்திரிகாவின் ஏனையவேஷங்கள் எப்படி இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சந்திரிகா, தன்னை ஒரு புத்திசாலியாக நினைக்கலாம்! ஆனால், தமிழர் முட்டாள்களும் அல்லர்; ஏமாளிகளும் அல்லர் என்பதை எடைபோட அவரது ''புத்திசாலித் தனத்தால்'' முடியவில்லையே!!

## பாலைவனம்

*பாலைவனம் (Desert) என்பது விலக்கப்பட்ட (Abandoned) எனும் பொருள்தரும் இலத்தீன் சொல்லில் இருந்து உருவானது. பூமியின் மொத்தப் பரப்பில் 08 மில்லியன் சதுரமைல் பாலைவனமாகும். இதில் வெப்பப்பாலைவனங்கள் மட்டும் 20 % வீதமாகும். புகழ்பெற்ற 'தார் பாலைவனம்' பாகிஸ்தானிலும் இந்தியாவிலுமாக சுமார் 2, 30, 000 சதுரமைல்களுக்குப் பரந்துள்ளது.*

*பொதுவாக, பாலைவனங்கள் ஆண்டுக்கு 25 சென்ரிமீற்றருக்குக் குறைவாகவே மழையைப் பெறுகின்றன. வியப்பூட்டும் அளவுக்கு, பல வகையான தாவரங்களும், உயிரினங்களும் பாலைவனங்களிற் காணப்படுகின்றன. இங்கே பறவைகள் மிகக்குறைவாகவே உள்ளன. பாலைவனத்தின் ஒவ்வோர் உயிரினமும் தத்தமக்கென ஒரு தகவமைப்பை (Adoption) உருவாக்கிக் கொள்கின்றன.*

# 'மோனலிசா' புகழ் லியோநாடோ டாவின்சி

இதுவரையில் மிக வியக்கத் தக்கவர்களாக வாழ்ந்த மனிதர்களில், இத்தாலியைச் சேர்ந்த லியோநாடோ டாவின்சி ஒருவராவார். (1452 - 1519) உலகப் புகழ் பெற்ற ஓவியங்களில், இவருடைய 'மோனலிசா' (Monolisa) மற்றும் 'த லாஸ்ற் ஸப்பர்' (The last Supper) ஆகியஓவியங்கள் அடங்குகின்றன. இவர் ஓவியராக மட்டுமல்லாமல், சிற்பி, கட்டடக்கலைஞன், கவிஞன் மற்றும் இசையமைப்பாளராகவும் விளங்கினார்.

அறிவியலின் முன்னணி வழிகாட்டியாக விளங்கிய இவர், கணிதம் பொறியியல் போன்றவற்றையும் ஆய்ந்தறிந்தார். அவருடைய பணிகளில், அவரின் கருத்துக்களும் கண்டுபிடிப்புக்களும் அவர் காலத்திலும் பார்க்க, பல நூற்றாண்டுகள் முன்னேற்றமடைந்தவையாகக் காணப்பட்டன.

அவருடைய காலத்திலிருந்த மருத்துவர்களிலும்பார்க்க, மனித உடலின் செயல்முறைபற்றி இவர் மிக ஆழமாக ஆய்ந்தறிந்திருந்தார். அதுமட்டுமல்லாமல், இன்று நாம் கூறும் வானூர்தி நூல் பற்றியும் (Aero Nautics) ஏறோ நொற்றிக்ஸ்) அவர், அன்றே ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தார். அவருடைய முன் மாதிரி வரைபடம் (Heli Copter) ஹெலி கொப்ரர்) உலங்கு வானூர்தியாகும்.

'வின்சி' என்றகிராமத்தின் பெயரை இவரின் தகப்பனாரின் குடும்பம் சிறப்புப் பெயராகப் பெற்றிருந்தது. புளொறன்ஸ் நகரிலிருந்து 95 கிலோமீற்றருக்கப்பாபாலுள்ள வின்சி கிராமத்துக்கண்மையில் லியோர்நாடோ பிறந்தார். அவர் அழகானவராகவும், சுறுசுறுப்பானவராகவும், மற்றவரைக் கவரக்கூடிய சிநேகப்பான்மையுடையவராகவும் வளர்ந்து வந்தார்.

ஆரம்பத்தில் அவர், இசை, ஓவியம் வரைதல், மாதிரி உருவங்களை உருவாக்கல் ஆகியவற்றில் நாட்டங்கொண்டிருந்தார். இவருடைய ஓவியங்களில் சிலவற்றை அன்ட்ரேடெல் வெறொச்சியோ என்ற ஓவியரிடம் லியோநாடோ அவர்களுடைய தகப்பனார் காட்டினார். உடனேயே வெறொச்சியோ இவருடைய ஓவியங்களி

னாற் கவரப்பட்டு, இவரை ஓவியக் கலையில் மேம்படச்செய்ய வேண்டும் என்று எண்ணி, தனது கலைக்கூடத்தில் சேர்த்துக்கொண்டார். பல ஆண்டுகள் லியோ நாடோ அக்கலைக் கூடத்தில் பயிற்சி பெற்று வந்தார் என நம்பப்படுகிறது.

அவர் உண்மைத் தோற்றங்களாற் கவரப்பட்டு, அவற்றைக் குறிதவறாமல் அதேமாதிரி தாள்களில் வரைவதிற் கவனஞ்செலுத்தினார். உதாரணமாக, தான் காணும் உண்மைத் தோற்றங்களை, முன் பின் தெரியாத உருவங்களான மலை, கற்பாறை, அபூர்வமான தாவர விலங்கினங்கள், மற்றும் தனிச்சிறப்பு வாய்ந்த முகங்கள், மனிதர்கள் ஆகியோரை அங்க அசைவுகளுடன் வெளிச்சம், நிழல் அடங்கிய தோற்றங்களில் தாள்களில் வரைவார்.

இயற்கைக் காட்சிகளைவிட, ஒவ்வொரு பொருளும், உதாரணமாக—மனிதனின் கண்கள் எப்படி ஆக்கப்பட்டுள்ளன? தாவரங்கள் எப்படி வளர்கின்றன? நீர், ஒளி போன்றவற்றின் நடைமுறைத் தன்மை என்ன? மற்றும் பறவைகள் எப்படிப் பறக்கின்றன? என்பன பற்றியும் மிக்க நுணுக்கமாக வரைந்தார்.

1478களில் 'த வேர்ஜின் ஒஃப் த றொக்ஸ்' (கற்களின் தூய்மை) என்ற ஓவியத்தை லியோ நாடோ வரையை ஆரம்பித்தார். இந்த ஓவியம், இப்பொழுது பாரிஸிலுள்ள லொவுறா (Lourre) என்ற அரும்பொருட் கலைக் காட்சிச் சாலையிற் பாதுகாப்பாக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஓவியத்தில், குழந்தை யேசுவுடன் மேரி மாதா, யேசுவில் நம்பிக்கைகொண்ட இளைய ஜோன், ஒரு தேவதை ஆகியோர், பூக்கள் நிறைந்த வில்வளைவிலான கூரைகொண்ட கற்பாறைப் பின்னணியில் நிற்பது காட்டப்பட்டுள்ளது. இதற்குப் பின்னர், வேறுவகையில் இதே மாதிரிப் படத்தை இவர் ஓவியமாக்கியுள்ளார். இந்த மதிப்பு வாய்ந்த ஓவியம் லண்டனிலுள்ள தேசியக் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

புளோறன்ஸ் நகரை விட்டுப் போக நினைத்திருந்த பொழுது, மிலானிலுள்ள அரசகுமாரன் லுடோவிக்கோ ஸ்டோசா அவர்களுடைய அரண்மனை அரசமன்றத்திலிருந்து இவருக்கு அழைப்பு வந்தது. ஒருபெரிய சிற்பத்தைச் செய்வதற்கு, லுடோவிக்கோ அரசகுமாரன் லியோநாடோ அவர்களை அழைத்திருந்தார். அரசகுமாரரின் மூதாதையரான பிரான்செஸ்கோ ஸ்டோசா என்பவர் குதிரையில் அமர்ந்திருக்கும் ஓவியமே இதுவாகும். வெண்கலத்தினால் இந்தச் சிலை எழுப்ப

வேண்டியிருந்தது. 8 மீற்றர் உயரமான இச்சிலையின் மாதிரி உருவத்தை லியோநாடோ முடிக்குந் தறுவாயில், பிரான்ஸ் நாட்டின் படைகளால் மிலான்நகரம் கைப்பற்றப்பட்டது. பின்னர் இந்த மாதிரிச் சிலை நாசமாக்கப்பட்டு விட்டது.

லுடோவிக்கோ குமாரனின் அரசசபையில் இருக்கும்பொழுது, ஆடம்பரமான சமயச் சடங்குகள், விழாக்கள் முதலியவற்றை லியோநாடா அவர்கள் நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தார். ஆனால், தனது அறிவியல் ஆராய்ச்சியிலும் அந்நகரக் கட்டடங்களைத் திருத்தியமைக்கும் செயல்திட்டம், மற்றும் சுகாதார, ஆரோக்கிய வளர்ச்சித் திட்டங்களைக் கவனிப்பதிலிருந்தும் அவர் விலகி இருக்கவில்லை.

மிலானிலிருந்த சந்தா மாரியா டேலி கிறாஸியா கோவிலின் மடத்துறவிகளுக்காகத் தனது மிக்க புகழ்பெற்ற ஓவியமான 'த லாஸ்ற் சப்பர்' (THE LAST SUPPER) என்ற ஓவியத்தை மிக ஆர்வமுடன் 1494 இல் வரையத் தொடங்கினார். தனது ஓவியத்தை அங்குள்ள சுவரில் வரைந்து முடிந்தாரேயாயினும், அவர் பயன்படுத்திய சாயம் தரங் குறைந்ததாய் இருந்ததால், அவர்களுடைய வாழ்நாட்களிலேயே சாயப்பூச்சு உரிந்து விழத் தொடங்கிவிட்டது.

சீடர்களின் மத்தியில் யேசு நிற்கும் மிக அழகான காட்சி கொண்ட இந்த ஓவியம் ஓரளவிற்கு மீட்டெடுக்கப்பட்டதுடன், அவ்வோவியம் மேலும் அழிவுறாமற் காப்பாற்றப்பட்டுவிட்டது.

அடுத்த சில ஆண்டுகளில் லியோநாடோ செய்முறைப் பொறியியல் துறையில் அதிக நேரத்தைச் செலவிட்டார். தனது எசமானராகிய லுடோவிக்கோவின் படைசம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனித்து வந்த அவர், பின்பு செசாறே போர்கியர் கோமகனின் பிரதான பொறியியலாளராகப் பதவி வகித்தார். எனினும் அவர் தனது ஓவியக்கலையைக் கைவிடவில்லை. தனது சொந்த நகரமான புளோறன்ஸ் திரும்பியதும், ஆட்சிமன்ற அவைக்கூடச் சுவர் ஒன்றில் பெரியபடம் வரைவதில் ஈடுபட்டார். அடுத்த சுவரில் இவருக்குப் போட்டியாக, புகழ்பெற்ற மைக்கலேஞ்சலோ என்ற ஓவியர் ஓவியம் வரைவதில் ஈடுபட்டிருந்தார். ஆனால், துர் அதிர்ஷ்டவசமாக இச்சிறந்த ஓவியர்களின் முழுவேலையும் முற்றாக முடிவடையவில்லை.

எனினும், இக்காலப் பகுதியில் லியோநாடோ, வேறொரு ஓவியமான மோனாலிஸா என்ற ஓவியத்தை வரைந்து முடித்திருந்

தார். இது, புளோறென்ஸ் நகரப்பணி முதல்வரின் மனைவியினுடைய முகபாவ ஓவியமாகும். இந்தச் சீமாட்டியின் அழகான புன்சிரிப்பும், செந்தளிர்ப்பான முகபாவமும் மாறாதிருப்பதற்காக, ஓவியம் தீட்டத் தொடங்கும் போதெல்லாம் சங்கீதம் இசைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த உலகப் புகழ் பெற்ற 'மோனோலிஸா ஓவியம் இப்பொழுது லொவ்றேயில் வைக்கப்பட்டுள்ளது.

1507இல் இருந்து 1513 வரை இத்தாலி நாட்டிலுள்ளஒவ்வொரு நகரமாக இவர் பயணஞ் செய்வ கொண்டிருந்தார். இந்த நேரத்தில், பிரெஞ்சு நாட்டின் புகழ் பெற்ற இளம் அரசனான முதலாம் பிரான்சிஸ் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அவருக்கு அனைத்து மதிப்பும் அளிக்கப்படுமென வாக்குறுதி அளித்து, அவரைத் தன் நாட்டுக்கு வரும்படி பிரான்சிஸ் அழைத்தான்லியோநாடோஅதை ஏற்றுக்கொண்டார். அம்போய்ஸ் Amboise- என்னுமிடத்திற்கண்மையிலுள்ளக் ளோக்ஸ் (Cloux) மாளிகை, அரசனால் இவருக்கு வழங்கப்பட்டது. தன் பிற்கால வாழ்க்கையை இந்த அரண்மாளிகையிற் கழித்தார். அவர் தனது வாழ்நாளில், தான்எழுதியவற்றை நல்வழியிற் சீர்செய்து முடிக்கலாம் என்று எண்ணியிருந்தாரேயாயினும், அதற்கு முன்பே அவர் மறைந்துவிட்டார். ஆகவே, அவருடைய புகழ்மிக்க, மதிப்பு வாய்ந்த, அவரது கையாலேயே எழுதப்பட்ட, மூலவரைப்பிரதிகள் அண்மைக்காலத்திலேயே வெளியுலகத்திற்குத் தெரியவந்தன.

இன்று அவருடைய சில குறிப்புப் புத்தகங்கள் வின்ட்சரிலுள்ள (றோயல்) அரச நூல்நிலையம், விக்ரோறியா நூல்நிலையம், அல்பேர்ட் அரும்பொருட் காட்சிச் சாலை, லண்டனிலுள்ள பிரிட்டிஷ் காட்சிச்சாலை ஆகியவற்றில் காணப்படுகின்றன.

வல்வை — குமார்

☐ வாழ்க்கை, சிலபேருக்கு நாடகமாகத் தோன்றுகிறது. நாடகம், சிலபேருக்கு வாழ்க்கையாகத் தோன்றுகிறது.

— வின்ஸ்டன் சேர்ச்சில்

யாழ்ப்பாணம்

## சூழலியல் வெளிக்களச் சுற்றுலா

*(சென்ற இதழ்த் தொடர்ச்சி)*

'பாலா அதைத்தூக்கி எல்லோருக்கும் காட்டியதும், அங்கேயிருந்த துரொசீரா தாவரங்களைப் பிடுங்கிச்சேர்க்கத்தொடங்கிவிட்டனர்.

அழகிய மென் சிவப்பு நிறத்தில் இருந்த அந்தச் சிறிய ஊனுண்ணித் தாவரம், உண்மையிலேயே பார்ப்பதற்கு அழகாகத்தான் இருந்தது.

அங்கிருந்து மீண்டும் வண்டியில் புறப்பட்ட அந்த ஆசிரிய ஆய்வுக் குழுவினா, மணற்காடு சவுக்குமர வளர்ப்புத் திட்டம், நாற்று மேடைப்பராமரிப்புத் திட்டம் ஆகியவற்றைப் பார்த்துப் பிரமித்தனர். பிரமாண்டமான அந்தக் காடு வ்ளர்ப்புத் திட்டம், தமிழீழத்தின் மிகச் சிறந்த ஒரு வளமாகவும், அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கும், தாவரவியல் ஆய்வாளர்கட்கும் பயனுள்ள ஒரு வனமாகவும் காட்சி அளித்துக் கொண்டிருந்தது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.க.துரைரத்தினம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தத் திட்டம், இன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் மிகச் சிறப்பாக விஸ்தரிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் காடு வளர்ப்புத் திட்டம் எதிர் காலத்தில் சூழல் சமநிலையைப் பேண உதவுவதுடன், தமிழீழத்தின் எரிபொருள் தேவையையும் தன்னிறைவாக்கக் கூடிய வகையில் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அங்கிருந்து மதிய உணவுக்காக நாகர் கோயிலின் முன்னால் பஸ் வண்டி நிறுத்தப்பட்டது. அந்தப் பழம் பெருமை வாய்ந்த கோயிலின் சூழலையும், அங்கு காணப்படும் பல்வேறு சாகியங்களையும் அவதானித்து, குறிப்புக்களையும் எடுத்துக் கொண்டிருந்தனர்.

> ''இங்கே இருந்து எழுதுமட்டுவாள் வீதிக்குப் போனால், கண்டல் தாவரச் சாகியத்தைப் பார்க்கலாம்...''

'கண்டல் தாவரங்கள்' என்று குகதாசன் மாஸ்ரர் கூறியதும், தாவரவியல் ஆசிரியர்களுக்குத் தான் கூடிய உற்சாகம் பிறந்தது... அவற்றைச் சேகரித்துச் சென்று, தமது மாணவர்களுக்குக் காட்டிக் கற்பிக்க வேண்டுமென்ற ஆவல்...!

சேற்று நிலங்களிற் காணப்படும் இந்தத் தாவரச் சாகியம், அந்தச்சூழலுக்கேற்ற பல்வேறு இசைவாக்கங்களைக் கொண்டதாகக் காணப்படுவதைக் உணரலாம்.

இச்சாகியத்தில், றைசோபோறா, புறூகைறா, அவிசீனியா போன்ற தாவரங்கள் காணப்படுகின்றன. இங்கெல்லாம், பெலிக்கன், போன்ற அரிய பறவை இனங்கள் கூடப் பெருமளவிற் காணப்படுகின்றன.

நாகர் கோயிற் சந்நிதியில் இருந்து தெற்கே எழுதுமட்டுவாள் பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று பஸ்வண்டி நிறுத்தப்பட்டதும், திக்குத் திக்காக இறங்கிச் சென்ற ஆசிரியர்களுக்குத் தூரத்தில் நின்ற படியே குகதாசன் மாஸ்ரர், அது பற்றிய விளக்கத்தைக்கொடுத்துக்கொண்டிருந்தார்.

சுவாச வேர்கள், மிண்டிவேர்கள், தாங்குவேர்கள், சீவச முளைத்தல் என்று அந்தச் சாகியத்தின் சிறப்பியல்புகளை ஒவ்வொன்றாகக் காட்டிக் கொண்டிருந்தார். அந்தச் சந்தடியில், கண்டல் மரங்களைக் களவாக வெட்டி விழுத்திக் கொண்டிருந்த விறகு வியாபாரிகள் கண்டல் காட்டுக்குள் தம்மை உருமறைத்துக் கொண்டு, எவரும் காணாதவாறு நின்றதைப் பார்க்கும் பொழுது வேடிக்கையாகவும் இருந்தது.

ஆம்... தமிழீழத்தின் இயற்கை வளங்களை அழித்து நாசமாக்கிக் கொண்டிருக்கும் இவர்களால் இந்த நாடே நரகமாகிக் கொண்டிருக்கின்றது.

'காடு நகரமானால் நாடு நரகமாகும்.

மரத்தை வாழ விடு, மரம் உன்னை வாழவைக்கும்' என்ற பல்வேறு வாசகங்கள் அங்கே அழகாக எழுதித் தொங்க விடப்பட்டிருப்பதைக் கண்டும் அந்த விறகு வியாபாரிகள் அவற்றைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

''சேர்... அங்கை ஒரு சீவச முளைத்தல் பெரிசா இருக்குது.. அது எனக்குத்தான் ஒருத்தருக்கும் இல்லை...''

என்று உற்சாகத்துடன் கூவிய பாலா மாஸ்ரர் சேற்று நிலத்தினுள் நின்ற றைசோபோறா தாவரத்தை நோக்கி சேற்று நிலத்தினூடாக நடக்கத் தொடங்கினார்.

சீவச முளைத்தல் என்பது கண்டல் தாவரத்திற்குரிய ஒரு சிறப்பியல்பாகும். தரையில் போதிய ளவு ஒட்சிசன் இல்லாத சூழலில், தாய் மரத்திற் பழம் இருக்கும் பொழுதே வித்துக்கள் முளைத்து, முளைவேர், வித்திலைக் கீழ்த்

தண்டு என்பன வளர்ச்சி அடைந்துபின்னர் மண்ணில் விழுந்து முளைப்பதால் புதிய கண்டல்தாவரங்களைத் தோற்றுவிக்கின்றன.

அத்தகைய சீவச முளைத்தற் பகுதியை எப்படியாவது பிடுங்கிவிட வேண்டுமென்ற ஆவலில் சேற்று நிலத்தினூடாகத் தாண்டித் தாண்டிப் போய்க் கொண்டிருந்த பாலா மாஸ்ரரைத் தொடர்ந்து,வயதில் மூத்தவரான நவரட்ணம் மாஸ்ரரும் போய்க் கொண்டிருந்தார்.

''சேர்...இரண்டு பேரும் வீட்டிலை சொல்லிப் போட்டுத் தான் வந்தனீங்களோ?....''

அவர்கள் இருவரும் சேற்றுநிலத்தில் தட்டுத் தடுமாறிப் போய்க் கொண்டிருப்பதைப்பார்த்த குணசீலன் மாஸ்ரர் பகிடியாகக் கூறியதும் எல்லாரும் வாய்விட்டே சிரித்து விட்டனர்.

அந்தத் தடைகள் எல்லாவற்றையும் தாண்டி பாலாவும், நவரட்ணம் மாஸ்ரரும் அந்தக் கண்டல் தாவரத்தின் சீவச முளைத்தற் பகுதிகளைப் பிடுங்கி எடுத்து நெஞ்சோடு அணைத்துப் பிடித்தபடி வெற்றி வீரர்களாகத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் இயற்கை வளம் நிறைந்த வடமராட்சிக் கிழக்கு, இயற்கைத் தாவரங்களையும், இயற்கைப் பறவைகளையும் தன்னகத்தே கொண்ட ஓர் எழில் மிகுந்த பிரதேசம்... அது இன்று பல்வேறு அநர்த்தங்களுக்கும், அழிவுகளுக்கும் உள்ளாக்கப்பட்ட நிலையில் அதன் இயற்கைத் தன்மையைப் படிப்படியாக இழந்து வருகின்றது.

அந்தச் சம்பவங்கள், அங்கே நின்ற அந்த அறிவியல் ஆசிரியர்களின் இதயத்தை ஆழமாகப் பாதித்தாலும், காத்திரமான சூழலியல் அறிவைப் பெற்றுவிட்ட மன நிறைவுடன் ஒவ்வொருவராகச் சென்று பஸ்வண்டியில் ஏறிக் கொண்டிருந்தனர். அவர்களைத் தொடர்ந்து அந்த வண்டியினுள் ஏறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் அருளீஸ்வரி வேதநாயகத்தின் உள்ளத்தில்ஊற்றெடுத்துக்கொண்டிருந்த பேருவகை அவரது முகத்திற் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஆம்.... வெளிக்களச் சூழலியல் அறிவைப் பெற்று, நிறைவைப் பெற்ற அந்த ஆசிரியர்களைச் சுமந்து, அந்த பஸ் வண்டி ஆடி அசைந்தபடி கோப்பாய் மூலவள நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது.

**ந. அனந்தராஜ்**

இ . ஜெயச்சந்திரன்,
உடுத்துறை வடக்கு, தாளையடி


☐ *கப்பல் ஒன்று கடலில் மூழ்கும்போது கடல் மாசடையாதா?*

ஓர் இயற்கைச் சூழலில் இன்னொரு புறக்காரணி கலந்து சமநிலையைக் குழப்புவதன் மூலம் சூழல் மாசடைகின்றது என்பது உண்மைதான்...... இயற்கைக் கடலில் கப்பல்கள் ஓடுவதும்கூட மாசு அடையவைக்கும். தமிழீழக் கடற்பரப்பில் தமிழ் மண்ணையும், மக்களையும், கடலையும் மாசுபடுத்தும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் போர்க் கப்பல்களை மூழ்கடிப்பதால் பெரிய அளவில் மாசுபடாது... தமிழீழம் புனிதப்படுத்தப்படுமல்லவா?

செ. மாலதி நெல்லியான்.

☐ *மெலனின் என்பது சூரிய ஒளியிலேயே அதிகம் காணப்படுகின்றது என்கிறார்களே? வேறு எவற்றில் இது காணப்படுகின்றது? இதனால் தான் எமது உடலில் கருமை, வெண்மை தோன்றுகின்றதாமே?...*

சூரிய ஒளியில் இவையெல்லாம் இல்லை. தோலில் தான் மெலனோசிஸ்றிஸ் என்ற நிறப்பொருள் காணப்படுகின்றது. இதுவே மெலனின் என்ற கறுப்புநிறப்பொருளை உற்பத்தியாக்குகின்றது. தோலில் அதிகளவில் மெலனின் நிறப்பொருள் செறிந்து காணப்பட்டால் உடல் கருமையாகவும், அவற்றின் செறிவுகுறைந்து ஐதாகக் காணப்பட்டால், கருமை குறைந்து வெண்மையாகவும் காணப்படும். மெலனோசிஸ்றிஸ் சூரிய ஒளிக்குத் தூண்டப்படுவதாலேயே, நீண்ட நேரம் வெயிலில் நிற்பவர்களின் தோல் கறுத்துக் காணப்படுகின்றது. அது சரிமாலதி!... வெள்ளை ஆட்கள் என்று அழகாகக் குறிப்பிடப்படுபவர்களில் எல்லோரும் ஏதோ ஒரு குறைபாடுடையவர்கள் இல்லையா?...



மாநகர சபை
யாழ்ப்பாணம்

# கேள்வி பதில்

தாவை சி. சோ. பதந்தன்,
மானிப்பாய் வீதி, தாவடி.

□ பிளேக் நோய் எவ்வாறு ஏற்படுகிறது?
எலிகள்தவிர, பிளேக் நோய்க்குக் காரணமான வேறு பிராணிக[ள்]
எவை?

"பிளேக் எனப்படும் கொள்ளை நோய்க்கான காரணி 'பெஸ்ருறெல்லா பாஸ்ரிஸ்' (Pesteurlla Pastis) என்னும் பக்ரீறியா. இப் பக்ரீறியாக்களை எலிகளில் வாழும் "செனொபசிலா சியொப்சிஸ்" (Xenopsylla Cheopsis) என்னும் தெள்ளுப் பூச்சிகள் காவுகின்றன, இப்பூச்சிகள் எலி, மூஞ்சூறு, நாய். பூனை ஆகியவற்றில் ஒட்டுண்ணிகளாக வாழும்.

— ஆனந்தி

சாந்தி குணரத்தினம்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

□ பூமி வட்டவடிவமானதாக இருந்தும் நாடுகளுக்கிடையே நேர வித்தியாசம் எவ்வாறு ஏற்படுகின்றது?

பூமியின் இயக்கம் காரணமாக உலகம் முழுவதும் நேரம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. உலகின் வெவ்வெறு பகுதிகளில் நடைப்பிடிக்கும் நேரத்தைப் பற்றிய தகவல்களை அறிவதற்கு பூமி 24 நேரப் பிரிவுகளாக, பிரிவு ஒவ்வொன்றும் 15 பாகைகள் கொண்ட ரேகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றை "மெரிடியன்" என்று அழைப்பர். வட துருவத்தையும், தென்துருவத்தையும் இணைக்கும் இக்கோடுகள் கற்பனையானவையே. ஒரு மெரிடியனில் உள்ள நாடுகளில் உள்ள நேரத்தைவிட அதற்குக்கிழக்கே உள்ள மெரிடியனில் ஒருமணித்தியாலம் கூடுதலாகவும், அதற்கு மேற்கே உள்ள மெரிடியனில் ஒரு மணித்தியாலம் குறைவாகவும் இருக்கும்.

வி. தங்கராஜா, கரவெட்டி

☐ விண்வெளிக் கலங்களில் பொருத்தப்படும் ATSR கருவி என்று ஒன்றைப் பற்றி அண்மையில் ஒரு சஞ்சிகையில் பார்த்தேன். அதைச் சற்று விளக்குவீர்களா?

இக் கருவியின் விரிவு Along Track Scanning Radiometer என்பது. இக்கருவியை இங்கிலாந்தில் உள்ள விஞ்ஞானப் பொறியியல் ஆராய்ச்சிச் சங்கத்தைச் சேர்ந்த ருதர்போர்ட் அபிள்டன் ஆய்வுக் கூட்டமைப்பு கண்டு பிடித்துள்ளது. இதனையே European Remote Sensing Satellite என்ற விண்வெளிக்கலத்திற் பொருத்தியுள்ளனர். இதன் மூலம் விண்ணில் இருந்து மிக உயரத்தில் பறக்கும் செயற்கைக் கோளில் இருந்து கடல் வெப்பநிலையை ஒரு பாகையில் 10/1 பங்கு திருத்தமாக அளக்கமுடியுமாம்.

எஸ். இராதா (திருமலை)
கலாவாணி ச. ச. நிலையம், கம்பர்மலை, வல்வெட்டித்துறை

☐ இறைச்சியை மென்மையாக்க ஏன் பப்பாசிக்காய் போடுகின்றார்கள்?

பப்பாசிக் காயில் உள்ள 'பப்பெயின்' என்ற நொதியம், இறைச்சியின் புரதங்களையும், தசை நார்களையும் இளகச் செய்து மென்மையாக்கி விடும்.

ஆ. மேனகா,
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், சுழிபுரம்

பச்சை வீட்டு விளைவு என்றால் என்ன? இவ்வாறு பெயர் வரக் காரணம் என்ன?

கடந்த சில ஆண்டுகளாக உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கி வருகின்ற தோற்றப்பாடே இந்தப் பச்சைவீட்டு விளைவு என்பது. சூரியனில் இருந்து வெளிவரும் வெப்பக் கதிர்வீச்சு வளிமண்டலத்தின் ஊடாகப் பூமியைச் சூடாக்குகின்றது. இவ்வாறு பூமி பெறும் வெப்பத்தின் ஒருபகுதியை மீண்டும் விண்வெளிக்கு இழக்கின்றது. இவ்வாறு வெப்பத்தின் ஒருபகுதியை வெளியேற விடாமல் தடுக்கின்ற செயற்பாடே பச்சைவீட்டு விளைவு எனப்படும். அறிவியல் தொழில்நுட்பவிளைவுகளினால் மெதன், குளோரோ, புளோரோ காபன், நைத்திரஸ் ஒட்சைட்டு, தாழ்நிலை வளிமண்டல ஒஸோன், போன்ற வாயுக்களின் அளவு அதிகரித்துச்சென்று, பூமியை ஒரு கண்ணாடிக்கூண்டு போல் அடைத்துக்கொள்வதால் வெப்பம் வெளியேற முடியாது போகின்றது. இதனையே பச்சை வீட்டு விளைவு என்கின்றனர். இதனால் பூமியின் வளிமண்டல வெப்பநிலை அதிகரிப்பதுடன், காபனீரொட்சைட்டின் செறிவும் 25%. அதிகரித்துள்ளது.

புவியின் உள்ளக அமைப்பைப்பற்றி அறிந்து கொள்வதற்கு மனிதன் எப்போதும் ஆவலுள்ளவனாக இருக்கிறான். இதை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளான். ஆனால் 6 அல்லது 7 கிலோமீற்றர்களுக்கு மேல் அவனாற் செல்ல முடியவில்லை. பின்னர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு வழிகளிலும் முயற்சித்தான். இறுதியில் மறைமுக வழியொன்றைக் கண்டறிந்தான். இந்த முயற்சியில், பூகம்ப அலைகளினால் ஏற்படும் பூமியதிர்ச்சியின் அதிர்வுகள் மூலம் புவியின்

# புவியினுள்ளே இருப்பது என்ன?

உள்ளகம் பற்றி ஒருவர் அறிந்து கொள்ளலாம். அதன் பலனாக, இதுவரை மேற்கொள்ளப்பட்ட படிப்பினை மூலம் எமது புவியில் மூன்று முக்கிய படிவங்கள் இருப்பதாகத் தெரிய வருகின்றது. நாங்கள் வசிக்கும் வெளிப்பகுதி பாறைகளினாலான புவியின் மேற்பரப்பு (CRUST) எனப்படும். அதன் கீழே உள்ள பகுதி ''வலைக்குமிழ்'' (MANTLE) எனப்படும். இறுதியாகப் புவியின் மத்திய பகுதி உள்ளகம் (CORE) என அழைக்கப்படுகின்றது.

பாறைகளினாலான புவியின் மேற்பகுதி திண்ம வடிவமானது. அதன் தடிப்பு நிலப்பரப்பில் 16 கிலோ மீற்றரில் இருந்து 50 கிலோமீற்றர் வரை (10-30மைல்கள்) வேறுபடுகின்றது. ஆனால் சமுத்திரங்களின் கீழ், அது ஏறக்குறைய 5 கிலோமீற்றர் வரையானதாகும். இந்தப் படிவம், பிரதானமாக 'சிலிகா' (SILICA) தொகுப்பைக் கொண்டதாகும். இந்தப் பாறைப் படிவத்தின் பரிமாணம் புவியின் பரிமாணத்தின் 1·/. மட்டுமேயாகும். அதனுடைய நிறை, புவியின் மொத்த நிறையில் 4·/. வரையிலானதாகும். புவியின் பாறைப் படிவமும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. பாரமற்ற மேற்பகுதி 'சிமா' (SIMA) என அழைக்கப்படுகிறது. பாரமான கீழ்ப் பகுதி 'சியல்' (SIAL) என (சிலிகா–அலுமினியத்திற்காக) அழைக்கப்படுகிறது. நாங்கள் புவியின் பாறைப் படிவத்தின் கீழே செல்லும் போது, உஷ்ணம் அதிகரிக்கின்றது. ஒவ்வொரு 35 மீற்றர் ஆழத்திற்கும் சுமார் 1·/. மான உஷ்ண அதிகரிப்புக் காணப்படுகிறது. 3கிலோமீற்றர் ஆழத்தில் வெப்பம் 100° வரையிலானதாகும். (கொதி நீரின் அளவு) அத்துடன், 50 கிலோமீற்றரில் உள்ள உஷ்ணத்தின் அளவு 1200 ·/. இது ஆகும். இது, பாறைகள் உருகக் கூடிய அளவு வெப்பமானது.

இந்தப் பாறைப் படிவத்தின் கீழேயுள்ள பகுதி வலைக்குமிழ் என (மன்ரில்) அழைக்கப்படுகின்றது. இது 2880 கிலோமீற்றர் (1900 மைல்கள்) ஆழமானதாகும். இதிற் பிரதானமாக இரும்பு, மக்னீசியம் ஆகியவற்றின் தொகுப்பே உள்ளது. இதில் திண்மப் பாறைகளுமுண்டு. இதன் முழுப்பரிமாணம் புவியின் பரிமாணத்தில் 84·/. ஆகும். இதன் நிறை புவியின் நிறையில் 67·/. வரையிலாகும்.

புவியின் மத்திய பகுதி உள்ளகம் (CORE) என அழைக்கப்படுகிறது. இது உயர் அடர்த்தி மிக்க திண்மப் பொருள்களினாலானது. இங்கு பிரதானமாக இரும்பும் நிக்கலுமே உண்டு. இதன் விட்டம் 2560 கிலோமீற்றர் (1600 மைல்கள்) ஆகும். அதன் உஷ்ணம் 8000° வரையிலானதாகும். இதன் பரிமாணம் புவியின் பரிமாணத்தில் 15·/· ஆகும். அதன் நிறை புவியின் நிறையில் 32·/. மானதாகும். இந்தத் திண்ம உள்ளகத்தைச் சூழ எல்லாப் பக்கங்களிலும் உருகிய இரும்பும் நிக்கலும் இருக்கின்றன. இந்த உருகிய பொருள்களின் பருமன் 2240 கிலோமீற்றர் (1400 மைல்கள்) வரையிலானதாகும். புவியின் உள்ளகம் புவியின் மேற் பரப்பிலிருந்து 6336 கிலோமீற்றர் (3960 மைல்கள் வரையிலானதாகும்)

— நவகீதன்

---

*மனிதப்பிறவிக்கு அடுத்தாற்போல், இவ்வுலகில் விந்தையான பொருள் புத்தகம்தான். ஏனெனில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ளவர்களுடனும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களுடனும் நாம் இன்னமும் உரையாடி இன்புற உதவும் அரிய சாதனம் புத்தகங்கள் அல்லவா?*

*— ஜோன் கிங்ஸ்லி*

[stamp]

## மத்திய உளவு நிறுவனம் (சி. ஐ. ஏ)

# சதி நடவடிக்கைகளின் உச்சம்!

உளவு அமைப்புக்கள் இன்று உலகின் ஒவ்வொரு நாட்டிற்கும் அத்தியாவசியமானவையாக அமைந்துள்ளன. எதிரியிடம் இருந்து தற்காத்துக் கொள்ளவும், எதிரியின் திட்டங்கள் நடமாட்டங்கள் என்பனவற்றை முன் கூட்டியே அறிந்து கொள்ளவும் உளவு அமைப்புக்கள் இன்றியமையாதனவாக இயங்குகின்றன.

கௌடில்யர் எழுதியுள்ள அர்த்த சாஸ்திரத்தில், மக்களின் உணர்வுகளைப்புரிந்து கொள்ள, அரசாட்சி செய்பவர்கள் உளவாளிகளை அமர்த்தவேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

உளவுத்தொழில் சாகசம் நிறைந்தது. புத்திக்கூர்மை, திறமை, பயிற்சி, சமயோசிதம் அபாரத்துணிச்சல் ஆகியவை இதற்கு அத்தியாவசியம்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் பனிப்போர் ஏற்பட்டு, உளவு நிறுவனங்கள் பிற நாட்டு அரசுகளைக் கவிழ்க்கக் கூடிய அளவிற்குப் பலம் பொருந்தியவை ஆகிவிட்டன.

ஆதிகாலத்தில் யுத்தம் நடக்கும்போதுதான் உளவாளிகள் நியமிக்கப்படுவார்கள். எதிரியின் படைப்பலம், போரிடும் யுக்திகள் என்பனவற்றை அறிந்து கொள்வதற்காக இவர்கள் பயன்படுத்தப்படுவர். இன்று போரிற்காக மட்டுமல்லாது, அரசியல், பொருளாதாரம். தொழில்நுட்பம் ஆகிய எல்லாத்துறைகளிலும் புலனாய்வு அமைப்புக்கள் ஊடுருவி நிற்கின்றன. ஒவ்வொரு நாடும் தனக்கென நிரந்தரமாகவே ஒரு புலனாய்வுத் துறையை ஏற்படுத்த ஆர்வங் கொள்கின்றது.

நவீன உலகில், உளவு ஸ்தாபனம் என்றவுடன் அனைவரது நினைவிலும் சட்டெனத் தோன்றுவது சி. ஐ. ஏ என்ற அமைப்புத்தான்! எமது பகுதிகளில் சாதாரண பாமர மக்களுக்கும் சி. ஐ. ஏ என்ற பதம் பரிச்சயமானது. கிராமங்களில் வாழும் படிப்பறிவற்றவர்கள்கூட தேசத்துரோகம், காட்டிக்கொடுப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுத் தண்டிக்கப்படுவோரை 'சி.ஐ. ஏ.' என்று குறிப்பிடுவது வழக்கம். அவர்கள், 'சி. ஐ. ஏ.' என்றால்

காட்டிக்கொடுப்பவர் என்ற அர்த்தத்தில் அதனைப் பயன்படுத்துவர். ஆனால் சி. ஐ. ஏ. என்பது அமெரிக்க உளவு ஸ்தாபனமாகும் .மத்திய புலனாய்வுத் துறை – 'Central Investigation Agency' சுருக்கமாக CIA என்று அழைக்கப்படுகின்றது.

சி. ஐ. ஏ. ஓர் அரசாங்கம் போலவே இன்று செயற்படுகிறது. இந்த அமைப்பு முக்கியமாக அயல்நாட்டு அரசியல் விவகாரங்களிலேயே ஈடுபடுகிறது. அயல் நாடுகளின் அரசியலில் ஈடுபடுவது, ஆராய்ச்சி, தகவற் சேகரிப்பு, கணிப்பு, கிளர்ச்சியாளர்களை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் சி. ஐ. ஏ. மிகக் கொடுமையான சதித் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்துகிறது. ஆட்சிக் கவிழ்ப்பு, பிடிக்காத தலைவர்களைத் தீர்த்துக்கட்டுவது, பொய்ப் பிரசாரம் ஆகியவற்றை இரகசியமாக, வெளியில் தெரியாமற் செய்கிறது.

இது உண்மையில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது, இராணுவ இரகசியங்கள் சேகரிக்க ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். 1948 ஆம் ஆண்டு அமெரிக்காவுக்குக் கொம்யூனிசத்தின் மீது இருந்த வெறுப்பு, பயம், சி.ஐ.ஏ. வாக உருவெடுத்தது. அப்போது கொம்யூனிஸ்ற்றுகள் செக்கோஸ்லேவேக்கியாவைக் கைப்பற்றினார்கள். மேலும், இத்தாலிய நாட்டுத் தேர்தல்களில் இவர்கள் வென்று விடுவார்கள் என்ற பயம் அமெரிக்காவிற்கு இருந்தது. அதனைத் தடுப்பதற்காக இரகசிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இந்நிலையில் சி.ஐ.ஏ. தலைவருக்கு அதிக சலுகைகள் அளிக்கப்பட்டன. விருப்பம்போல் அரச பணத்தைச் செலவளிக்க அவர் அனுமதிக்கப்பட்டார். 1947 முதல் சி.ஐ.ஏ. செயற்பட்டு வந்த போதிலும், 1967 இற்குப் பிறகு தான் அதன் முழு நடவடிக்கைகளும் உலக மக்கள் கவனத்திற்கு வந்தன.

வியட்னாம் யுத்தத்தின்போது, அமெரிக்காவில் மிச்சிகன் பல்கலைக்கழகத்தில் பொலிஸ் பயிற்சி வகுப்புக்கள் சி.ஐ.ஏ. சார்பில் நடத்தப்பட்டன. அமெரிக்க வர்த்தகம், தொழிலாளர் சங்கங்கள், அரசாங்கம், மத ஸ்தாபனங்கள், கல்விக்கூடங்கள், பத்திரிகைத்துறை, புத்தகப் பதிப்பாளர்கள், கலாச்சாரக் குழுக்கள் இப்படி எல்லாத் துறைகளிலும் சி.ஐ.ஏ. தனது பிரிவினரை அமர்த்தியிருந்தது,

1953 இல் ஈரானிலும், 1954 இல் தென்னமெரிக்காவைச் சேர்ந்த கௌதமால என்னும் நாட்டிலும் இடதுசாரி அரசுகள் சி.ஐ.ஏ. இனால் தூக்கி எறியப்

பட்டன. 1956 ஆம் ஆண்டு ரஷ்ய கொம்யூனிஸ்ற் கட்சி இரகசியக் கூட்டத்தில் ஸ்ராலினைக் கண்டித்து குருசேவ் பேசியதை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தியது. 1964 இல் சுதந்திர இயக்கத்தை நசுக்க சி.ஐ.ஏ. பெரு முயற்சிகளை மேற்கொண்டது. இவ்வாறு பலம் பொருந்திய அமைப்பான சி. ஐ. ஏ பல படுதோல்விகளையும் சந்தித்திருக்கின்றது.

1953 இல் ஈரான் பிரதமமந்திரி முகமத் மொசாடக் பதவிநீக்கம், 1954 இல் இடதுசாரி அரசு கௌதமாலாவில் கவிழ்ப்பு, 1985 இல் எகிப்தில் ஜனாதிபதி கமால் அப்துல் நாஸரைக் கொல்ல முயற்சி, (தோல்வி) 1959 இல் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா கொலை, 1961 ல் காங்கோ குடியரசுப் பிரதமமந்திரி பாட்ரிக் லுமும்பா கொலை, 1966 இல் கானா நாட்டு ஜனாதிபதி கௌமே என் குருமா ஆட்சிக் கவிழ்ப்பு. 1967 இல் கியூபா நாட்டுப் புரட்சி வீரர் சேகுவேரா கொலை, 1969 இல் மொசாம்பிக் நாட்டு எட்லர் மோன்ட்லேன் கொலை, 1973 இல் சிலிநாட்டுத் தலைவர் சால்வடோர் அல்லன்டே கொலை, 1975 இல் கென்யா நாட்டு முற்போக்குத் தலைவர் ஜோசையா காருக்கி கொலை, 1960 முதல் இன்று வரை கியூபா நாட்டுத் தலைவர் ஃபிடல் கஸ்ற்றோவைக் கொல்ல பலமுயற்சிகள், (அனைத்தும் தோல்வி) 1981 இல் ஈரானில் குண்டு வீச்சில் அயத்தொல்லா முகமத் பெகஸ்டி, மற்றும் பல தலைவர்கள் மரணம், பனாமா நாட்டு ஜெனரல் ஓமார் டோரி ஜோஸ் கொர்ரரா விமான விபத்திற் பலி, லிபிய நாட்டுத் தலைவர் கடாஃபி அவர்களைக் கொல்ல முயற்சி என சி. ஐ. ஏ யின் நடவடிக்கைகளை ஆண்டு வாரியாகக் குறிப்பிடலாம்.

உலகம் முழுவதும் சி. ஐ. ஏ தனது உளவு விதைகளைப் பரவலாக விதைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

— கிருஷ்ணகுமார்.

---

*ஒவ்வொரு மனிதனும் கற்றுத் தேர்ச்சிபெறவேண்டிய கலை ஒன்று இருக்கிறது. அதுதான் சிந்திக்கும் கலை. சிந்திக்கும் ஆற்றலைப் பெறாதவர்களை எதற்காக மனிதர்கள் என்று அழைக்கவேண்டும்?*

டி. எஸ். கோல்ரிட்ஜ்

---

# வண்ணத்துப்பூச்சியிடமிருந்து ஒருபாடம்

அழகாக வெட்டி விடப்பட்ட என்னுடைய தோட்டத்தில் இருந்துகொண்டு ஒரு வண்ணத்துப்பூச்சி எதையோ தேடுவதை - எதையோ நாடுவதை - எதையோ விரும்புவதைக் கவனித்துக் கொண்டே இருந்தேன்.

நேற்றுத்தான் அந்த வண்ணத்துப்பூச்சி அந்த மலரைக் கண்டுபிடித்தது. அந்த மலர் மிகவும் விசேடமான மலராக அந்த வண்ணத்துப்பூச்சிக்கு ஆகிவிட்டது. அதைத் தேடிவருகிறது; அதற்கு அருகாமையிலேயே இருக்க விரும்புகிறது. அந்த மலரைத் தடவிப்பார்ப்பதில் அதற்கு ஒரு சுகம். வண்ணத்துப்பூச்சியால் மட்டுமே அந்த மிருதுவான வருடலை ஓர் அழகான மலருக்கு அளிக்கமுடியும்.

ஆனால், அந்த மலர், செடிகளை வெட்டுகின்ற தோட்டக்காரனுக்கு அவ்வளவு முக்கியமான மலரல்ல. அது வெட்டப்பட்டு மதிய வெயிலில், தரையில் வீழ்ந்து வாடிக்கொண்டிருக்கிறது. வெட்டிப்போடப்பட்டிருக்கும் புற்களின் மத்தியில் அது பாதி மறைந்து கிடக்கிறது. இப்போது அழகான மலராக அது இருக்கவில்லை.

பாவம், வண்ணத்துப்பூச்சி சிறகடித்துப்பறந்து கொண்டிருக்கிறது... கண்டுபிடிக்க முயல்கிறது .. தேடுகிறது... விரும்பித் தேடுகிறது...

நேற்று நாம் மதித்துப்போற்றிய இலட்சியங்கள் இன்றைக்கு அர்த்தமற்றதாகி விடுவதை, வாழ்க்கையின் கடின அநுபவங்களிலிருந்து கற்றுக் காள்ள வேண்டியிருக்கிறது. வாழ்க்கையின் தோட்டக்காரன் அவற்றை வெட்டிப்போட்டு விடுகிறான். வெட்டிப்போடப்பட்ட புற்களுக்கு மத்தியில், நமது காலடியிலேயே அது வீழ்ந்து கிடக்கிறது.

ஆனாலும் வண்ணத்துப்பூச்சி மீண்டும் மீண்டும் கண்டுபிடிக்க முயல்கிறது, தேடுகிறது... விரும்பித் தேடுகிறது ...: அதைவிட அழகான மலர்களை அது கண்டுபிடிக்கத்தான் போகிறது.

# மாணவர் பக்கம்

நாமும் புதிய, பெரிய இலட்சியங்களை தேடிக் கொண்டே இருக்கவேண்டும். தேடினால் அவை

நமக்குக்கிடைக்கும். வண்ணத்துப்பூச்சி, மலர் களைக் கண்டுபிடிப்பதைப்போல, புதியஇலட்சியங் களை நாமும் கண்டுபிடிக்கலாம்.

வண்ணத்துப் பூச்சிகளின் வாழ்க்கையில் ஏராள மான மலர்கள் இருப்பதைப்போல, நம்முடைய

வாழ்க்கையிலும் நிறைய இலட்சியங்கள் இருக்கின் றன. இதற்கு முன்னால் மிக முக்கியமானதாகத் தோன்றிய இலட்சியங்கள் இருக்கவே செய்கின்றன. முன்பு சிறப்பானதாகத் தோன்றிய இலட்சியம் வட்டப்பட்டு விடுமானால், நாம் புரிந்துகொள்ள முடியாத ஏதோ ஒரு காரணம் அதற்கு இருக்க வேண்டும்.

எப்போதும் கண்டுபிடிக்க முயற்சிப்பது ......
எதையாவது தேடிக்கொண்டே இருப்பது, விரும் பித்தேடுவது ஆகியவை வாழ்க்கைப்போக்கின் இயற் கையான அம்சங்கள். அப்படித் தொடர்ந்து செய் கின்றபோது, தோட்டக்காரன் எதற்காகச் சில வற்றை வெட்டுகிறான் என்பதும் நமக்குப் புரிய ஆரம்பிக்கிறது. அதைவிடச் சிறந்த ஒன்றை நாம் தேடிக் கண்டுபிடிப்பதற்காகவும் அவன் அப்படிச் செய்திருக்கலாம்!

— **எம். ஆர். கோப்மேயர்**

## அரும்புகள்

### மாணவர் ஆக்கம்

# எயிட்ஸின் வரலாறு

எயிட்ஸ் நோய் 1981 ஆம் ஆண்டு அறியப்பட்டது. ஆனால்இதை உண்டாக்கும் வைரஸ் கிருமி 1983 ஆம் ஆண்டிலே தான் இனம் காணப்பட்டது. பிரான்ஸ் தேசத்தில் உள்ள பாஸ்ரர் விஞ்ஞானக் கூடத்திலேயே முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது இது LAV வைரஸ் எனச் சொல்லப்பட்டது.

1984ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள தேசியப் புற்றுநோய் நிறுவனம் இக்கிருமிதான் எயிட்ஸ் கள் இருப்பதாக இப்பொழுது நம்பப்படுகிறது. ஆரம்பத்தில் மேற்கத்தைய நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்டது HIV 1 என்று அழைக்கப்படுகிறது. பின்பு மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட புதிய உபபிரிவை HIV 2 என அழைக்கிறார்கள்.

நோயை உண்டாக்குகிறது என்பதை உறுதிப்படுத்தியது. அப்போது இதற்கு HTLV III வைரஸ் என்று பெயரிடப்பட்டது.

ARV வைரஸ் என்று சில தருணங்களில் கூறப்பட்டது. 1986ஆம் ஆண்டில் தான் HIV வைரஸ் என்ற பெயர் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டது, HIV வைரசில் இரண்டு உபபிரிவு

HIVவைரஸ்கிருமிகள் நோயுற்ற மனிதரின் உடற்திரவங்களில் காணப்படுகின்றன. ஆனால் நோயைப் பரப்புவதில் இரத்தமும், இந்திரியமும், பெண் பாலுறுப்பில் இருந்து சுரக்கும் திரவமுமே முக்கியமானவை.

தொகுப்பு:- சி.யுகேந்திரன்,
ஆண்டு - 11
மன்/அடம்பன்ம.ம.வி, அடம்பன்.

# எழுபதுகளில் சில துளிகள்

01. 1970ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சிப் பீடம் ஏறினார்.

02. 1970ஆம் ஆண்டு தமிழ் மாணவருக்கு எதிராக, தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது.

03. 1971ஆம் ஆண்டுப் பகுதியில் பட்டதாரி மாணவன் சத்திய சீலன் தலைமையில் மாணவர் பேரவை என்ற அமைப்பு இயங்கி வந்தது.

04. தலைவர் பிரபாகரன், சிவகுமாரன், தங்கத்துரை போன்றோர் 1971ஆம் ஆண்டுப்பகுதியில் மாணவர் பேரவையுடன் சேர்ந்து இயங்கிவந்தனர்.

05. 1971ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜே. வி. பி. யின் கிளர்ச்சியை அடக்கும் இராணுவ நடவடிக்கையில், பதினையாயிரத்திற்கும் அதிகமான சிங்கள இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

06. 1972ஆம் ஆண்டுக்கு முதல் இலங்கையில் இருந்த யாப்பு சோல்பரி யாப்பு. இது ஆங்கிலேயரின் யாப்பு.

07. 1972ஆம் ஆண்டு மே 22 ஆம் நாள் புதிய குடியரசு அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

08. 1972ஆம் ஆண்டுக் கடைசிப் பகுதியில் 'புதிய தமிழ்ப்புலிகள்' என்ற பெயருடன் விடுதலைப் புலிகள் தமது விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

09. 1972ஆம் ஆண்டிலேயே 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற தாரக மந்திரம் தலைவர் பிரபாகரனால் வரையப்பட்டது.

10. 1974ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம்நாள் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் நடந்தன. இதில் ஒன்பது அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

11. 1974 ஆம் ஆண்டு ஜூன் 5 ஆம் நாள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் வீரச்சாவடைந்தவர் உரும்பிராய் சிவகுமாரன்.

12. 1975ஆம் ஆண்டு ஜூன் 27ஆம் நாள் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் சூத்திரதாரியும் தமிழினத்தின் துரோகியுமான அல்பிரட் துரையப்பா பொன்னாலையில் வைத்து தலைவர் பிரபாகரனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

13. 1976ஆம் ஆண்டு மே 5ஆம் 'புதிய தமிழ்ப் புலிகள்' அமைப்பு 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என பெயர் மாற்றம் பெற்றது.

14. 1976ஆம் ஆண்டு மே மாதம் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாடு நடந்தது.

15. 1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிப்பீடம் ஏறியது.

16. 1978ஆம் ஆண்டு ஏப்ரல் 7ம் நாள் இன்ஸ்பெக்ரர் பஸ்தியாம் பிள்ளையும் அவரது பொலிஸ் அணியும் மன்னார் முருங்கன் காட்டுப்பகுதியில் வைத்து புலிகளால் அழிக்கப்பட்டனர்.

17. 1978ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள், தலைமறைவு இயக்கமாக இயங்கி வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளுக்கு உரிமை கோரினார்கள்.

18. 1978ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்காவைத் தேர்தற் களத்தில் இருந்து விலக்குவதற்காக, ஏழாம் இலக்க விசேடச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது.

19. 1978ஆம்ஆண்டு மே 19ஆம் நாள் விடுதலைப் புலிகள் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

20. 1978ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் நாள் ஜே.ஆரினால் புதிய அரசியலமைப்புச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

21. 1978 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் நாள் அரசுக்குச் சொந்தமான 'அவ்ரோ' விமானம் இரத்மலானையில் புலிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

22. 1979 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் நாள் விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்திற்குப் பதிலாக, பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

23. 1979ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் நாளுக்கு முன் விடுதலைப் புலிகள் அழிக்கப்படவேண்டுமென, பிறிகேடியர் வீரதுங்கா வுக்கு ஜே. ஆரினால் விசேட ஆணை வழங்கப்பட்டது.

தொகுப்பு:- ப. தயாளன்
தாவடி

# உரிமைக் கடன்

என்ன பாவமிப் பிஞ்சுகள் செய்தனர்.........?
ஏன் உலர்ந்தனர் ........? ஈட்டிமேல் ஓடினர்.........?
சன்னமாடிச் சுதந்திரம் உண்ணுமுன்.........
தந்தைதாய்... முக முத்தமும் 'பட்டனர்'
மன்னராய்... இவர் ஆண்டமண் பேய்களின்
மாடமாய், வசந்தம் இடம் பேர்ந்ததால்.........
கண்சுடும் பசிக் 'கற்சிறை' முட்டினர்?
கன்றுகள்... கசம், கான்சரிற் கெட்டனர்!

சோறிலை; சத்துச் சூரணம் இங்கிலை;......
'சூலநோய்' அறுத்தாழவும் ஆளிலை;......
பீறு குண்டுகள் தூங்குமோ ......? தோணலை ?
பீடெழுங் கனற் பேரிகை ஓயலை ?
"நீறிடோம்" என நம்பி ...... நாம் ... சாவிலும்
நிச்சயம் புது உச்சமே நாட்டுவோம்!
"வீறு மாறிடோம்" ? ஆயினும்...... 'மண்மகர்'
வீழல் ..... மாற்றணும் வேள்வியிற் பூத்துளோம்!

முட்டை ஓட்டை உடைத்துமே மூச்சினால்
முற்றந்தன்னை... முகருமெங் குஞ்செலாம்
திட்டமிட்ட தடைக் கொலை... வாளிடை
தீய்தலோ விதி? தர்மமோ? 'மேற்கெலாம்'
'ட்டமேற்றிப்' படரும் எம் தோழரே.........
பாரும், வாழ நீர் போயினீர்... போரிலே,
சுட்ட புண்களாய்ப் பிஞ்செலாம் வேகையில்
'சொப்பனச் சுகம் ... தூசெலோ? சிந்தியும்.

தாங்கள் ஈன்றதைத் திக்கெலாம் விற்றவர்.
"தாகமே தமிழ்" ...... தம்பட்டம் தட்டல் போல்......
ஓங்கி...... மேற்கராய் மாறி, வாய் வீச்சிலே......
'ஓதல்' ...... போதுமோ? 'உள்ள' –ஊற்றோய்வதோ......?
தூங்கலாகுமோ தூ'ணனப்'' பொங்கிய......
தூயநெஞ்சு'......போர் செய்து மெம் பிள்ளையை,
ஈந்து காக்குதே ... எண்ணும்? 'மெய்' கூட்டிடும்!
'இரத்த பாசமே' கைகொடும்? உய்யலாம்!

— த. ஜெயசிலன் —

## மாறிவந்த வரலாறு

குந்தியிருந்ததும்
குறட்டை விட்டதும்
கூடியிருந்து வேடிக்கை பார்த்ததும்

மண்டியிட்டதும்
மன்னிப்புக் கேட்டதும்
மங்கையர் பலம் குன்றியிருந்ததும்

காத்திருந்ததும்
காட்டிக் கொடுத்ததும்
கழுத்தை நீட்டி மாலைகள் கேட்டதும்

தடைகள் வந்ததும்
தனிமொழிச் சட்டங்கள் வந்ததும்
தட்டிக்கேட்கத் தண்டனை தந்ததும்

சாதிகள் கொண்டதும்
பேதங்கள் சொன்னதும்
சாவுக்கஞ்சிய தலைவர்கள் வந்ததும்
அன்றைய வரலாறு!

உரிமை கேட்டதும்
உணர்வுடன் எழுந்ததும்
போர்க்களமாடி வெற்றிகள் சேர்த்ததும்

மானங் காத்ததும்
மாயை களைந்ததும்
மங்கையர் ஓர்அணி கொண்டெழுந்ததும்
களங்கள் வென்றதும்
பகைகள் முடித்ததும்
மாவீரர் கழுத்தில் மாலைகள் வீழ்ந்ததும்

தடைகள் வென்றதும்
படைகள் கொன்றதும்
தம்பியர் தங்கையர் போருக்கு வந்ததும்

உள்ளத்திலுயரிய சிந்தனை கொண்டதும்
உன்னதமானதோர் இலட்சியம் பெற்றதும்
தடைகள் உடையப் படைகள் கொண்டொரு
தலைவன் வந்ததும்
இன்றைய வரலாறு.

வெ. சந்திரன்

மாணவ, மாணவிகளே! சிறிலங்கா அரச விமானப்படையினரின் இரண்டு 'அவ்றோ' விமானங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வரலாற்றுச் சாதனை நிகழ்ந்ததே! அதைப்பற்றிய உங்கள் எண்ணக் கருத்துக்களைக் கட்டுரையாகவோ, கவிதையாகவோ எழுதி, 'சாளரம்' முகவரிக்கு உடனடியாகவே அனுப்பி வையுங்களேன்!

வி்ற்றமின்கள், துணையான போசனைப் பதார்த்தங்களாகும். இவை சில நோய்களைக் குணப்படுத்தும் அல்லது தடுக்கும் இயல்பை உடையன. விற்றமின்கள் ஆரம்பத்தில் அமைன் (Amine) எனப் படும் கூட்டத்தைக் கொண்டவையாக அறியப்பட்டிருந்தன. அத்துடன், இவை உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக இருந்தமையினால், முக்கியமான அமைன்கள் (Vitamine) எனப்பட்டன. ஆனால் பின்னர் எல்லா விற்றமின்களும் அமைன் கூட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என அறியப்பட்டதனால், Vitamine இல் உள்ள'E' விடப்பட்டு, Vitamine எனஅழைக்கப்படுகின்றன.

# விற்றமின்கள்

தொகுப்பு — சத்யா
தமிழீழ மருத்துவக் கல்லூரி.

உடலை ஆரோக்கியமாகப் பேணுவதற்கு குறைபாடுகள் ஏற்படாது தடுப்பதற்கும் எல்லா விற்றமின்களும் போதியளவில் தேவைப்படுகின்றன. ஒரு விற்றமின் எமது உடலின் நீண்டகாலத்திற்கு இல்லாது இருக்குமாயின், இறுதியில் அதன் விளைவாக குறைபாட்டு நோய் ஏற்படுகிறது. உதாரணமாக விற்றமின் C குறைபாட்டினால் ''ஸ்கேவி'' (Scurvy) நோயும் விற்றமின் D குறைபாட்டினால் 'என்புருக்கி' (Ricket) நோயும் ஏற்படுகின்றன. முதியவர்களும் மது அருந்துபவர்களும் குறைந்தளவு உணவை உள்ளெடுப்பதனால். இவர்களில் விற்றமின் குறைபாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

வளர்ந்தவர்களிலும் பார்க்க, குழந்தைகளிற்குக் குறைந்தஅளவிலேயே விற்றமின்சள் தேவைப்படுகின்றன. ஒருவர் நிறையுணவை உள்ளெடுத்துவரின், அவர் சாதாரணமாக விற்றமின் மாத்திரைகளை உள்ளெடுக்கத் தேவையில்லை. சிறிய குழந்தைகள், உணவுக் கால்வாயிலுள்ள நோய்கள் காரணமாக, தாம் உள்ளெடுக்கும் உணவிலிருந்து விற்றமின்களை அகத்துறிஞ்ச முடியாதுள்ள முதியவர்கள் போன்றோர் விற்றமின் மாத்திரைகளை உள்ளெடுப்பதன் மூலம் பயனைப் பெறமுடியும்.

சிபார்சு செய்யப்பட்ட அளவிலும் அதிகமாக விற்றமின்களை உள்ளெடுப்பதன் மூலம், உடல் ஆரோக்கியத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. மாறாக, சில விற்ற

மின்களை அதிகளவில் உள்ளெடுப்பதன்மூலம், அவை உடலுக்கு நச்சுத்தன்மை உடையனவாக மாறுகின்றன. சுயமாக விற்றமின்களை உள்ளெடுப்பதைவிட, வைத்தியரின் ஆலோசனையுடன் உள்ளெடுப்பதே சிறந்ததாகும்.

விற்றமின் குறைபாடு என்பது, ஒரு குறித்த வகையான விற்றமின் உணவில் இல்லாதிருத்தல், அல்லது உணவில் இருந்தும் உடலின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதிருத்தல் ஆகும். விற்றமின் குறைபாடு படிப்படியான செயன்முறைகளினூடாகவே வெளிக்காட்டப்படுகின்றது. விற்றமின் குறைபாட்டின் அறிகுறிகள் வெளிக்காட்டப்படுவதற்குமுதல், உடலில் உள்ள விற்றமின்களின் அளவு மிகவும் குறைவடைந்து விடுகின்றது.

உடலிலிருந்து எவ்வளவு விற்றமின் இழக்கப்பட்டுள்ளது? எவ்வளவு காலம் உணவில் விற்றமின் இல்லாதிருந்துள்ளது? உடலில் சேமிக்கப்பட்டுள்ள விற்றமின்களின் அளவு என்பவற்றிலேயே அறிகுறிகள் ஏற்படுவதற்குரிய காலஅளவும் தங்கியுள்ளது.

தற்போது உள்ளெடுக்கப்படும் விற்றமின்களின் அளவுகள் கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்டதாகவே உள்ளன. சில ஆராய்ச்சியாளர்கள் முன்பு சிபார்சு செய்யப்பட்ட அளவுகள் மிகவும் குறைந்தளவானவை எனவும், நோய்களுக்கு எதிராக நன்மைகளைப் பெறுவதற்குக் கூடியளவில் சில விற்றமின்களை உள்ளெடுக்க வேண்டும் என்றும் கூறுகின்றார்கள்.

உடலுக்குத் தேவைப்படும் விற்றமின்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) கொழுப்பில் கரையும் விற்றமின்கள் - A, D, E, K
(2) நீரில் கரையும் விற்றமின்கள் - B, C

## கொழுப்பில் கரையும் விற்றமின்கள்

### 1. விற்றமின் - A (Retinol)

**காணப்படும் உணவுப்பொருட்கள்:-**

இதனை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உணவிலிருந்து பெறமுடியும்.
கரட், கீரை, தக்காளி, ஈரல், சிறுநீரகம், மீன்எண்ணெய், முட்டை மஞ்சட்கரு, வெண்ணெய், பாலாடைக்கட்டி, பாலாடை, பால்

## II) தொழில்:-

a) றொடொப்சின் (Rhodopsin) உற்பத்திக்கு உதவுதல் மூலம் இரவுப் பார்வைக்கு உதவும்.
b) என்புகளினதும் பற்களினதும் சாதாரண வளர்ச்சிக்கு உதவுதல்
c) தோலினதும் சீதமென்சவ்வுகளினதும் ஆரோக்கியத்திற்கு அவசியமானது.
d) தொற்றுக்களில் இருந்து உடலைப் பாதுகாத்தல்.
e) கலங்களை வேறுபடுத்தி அறிவதற்கும் கலங்களின் வளர்ச்சிக்கும் உதவுகின்றது.

## III) இயல்புகள்:-

கரோட்டின் (Corotene) என்னும் பதார்த்தத்தில் இருந்து உடலினால் விற்றமின் A தொகுக்கப்பட முடியும். கரோட்டின் மரக்கறிவகைகளிற் காணப்படுகின்றது. இவ் விற்றமின் ஈரலில் சேமிக்கப்படுகின்றது. சாதாரணச் சமையல் வெப்பநிலையைத் தாங்கக்கூடியது. ஒட்சிசன் முன்னிலையில் உயர் வெப்பத்தினால் அழிவடையும். கரோட்டின் அதிகளவு உள்ள உணவு உள்ளெக்டுகப்பட்டால் தோல் மஞ்சள் நிறமாக மாற்றமடையும்.

## IV) குறைபாடுகள்:-

a) மங்கிய வெளிச்சத்தில் பொருட்களைப் பார்க்கும் திறன் குறைதல்.
b) விழிவெண்படலம் உலர்வதுடன் ஏற்படுகின்றது. இதன் விளைவாக இறுதியில் குருட்டுத்தன்மை ஏற்படும்.
c) குன்றிய வளர்ச்சி.
d) தோல் உலர்ந்து கரடுமுரடாகக் காணப்படுவதுடன் தோலின்சுருக்கங்கள் ஏற்படும்.
e) உணவுக்கால்வாய், சிறுநீர்ச்சனனிப்பாதை, சுவாசப்பாதை என்பவற்றிலுள்ள சீதமென்சவ்வுகளின் இயல்புகளைப் பாதிப்பதன்மூலம் அசாதாரணத் தொழிற்பாட்டை மேற்கொள்ளல்.
f) சீதமென்சவ்வுகளினூடாக தொற்று விரைவில் ஏற்பட ஏதுவாக இருத்தல்.
g) தோலில் அழற்சி ஏற்பட்டு சீழைக் (pus) கொண்ட வீக்கங்கள் காணப்படும்.

## 2 விற்றமின் - D (Calciferol)

**I) காணப்படும் உணவுப் பொருட்கள்**

மீன்எண்ணெய், ஈரல், முட்டைமஞ்சட்கரு, வெண்ணெய், பாலைக்கட்டி, சிப்பிகள்

**II) தொழில்:-**

a) கல்சியம், பொசுபரசு, அகத்துறிஞ்சலுக்கும் அனுசேபத்திற்கும் உதவுதல்.

b) என்புருக்கி நோய் ஏற்படாது தடுத்தல் (Anti Rachitic)

**III) இயல்புகள் :-**

தோலிலுள்ள ஏகொஸ்ரெறோல் (Ergosterol) என்னும் பதார்த்தத்தில் இருந்து சூரிய ஒளியின் தொழிற்பாட்டினால், உடலினால் உற்பத்திசெய்ய முடியும். சேதனக்கரைப்பானில் கரையக்கூடியது. ஈரலில் சேமிக்கப்படும்.

**IV) குறைபாடுகள் :-**

a) குழந்தைகளில் என்புருக்கி நோய் (Ricket) ஏற்படுதல்.

b) வளர்ந்தவர்களில் என்பு மென்மையாதல் (Osteomalacia) என்பரிப்பு (Osteoporosis) என்பன ஏற்படுதல்.

c) என்பு, பற்கள் ஆகியன கல்சியம் பொசுபரசைப் பயன்படுத்தலில் இடர்ப்பாடுகள் ஏற்படும்.

d) பலவீனம் (Weakness) ஏற்படும்.

## 3 விற்றமின் E - (Alpha tocopherol)

**I) காணப்படும் உணவுப் பொருட்கள்:-**

கோதுமைத்தானியம், முட்டைமஞ்சட்கரு, பால், ஈரல் அரிசி, பச்சைஇலைவகை, மரக்கறிகள், பாலாடைக்கட்டி.

**II) தொழில்:-**

உடல் இழையங்களில் நடைபெறுகின்ற ஒட்சியேற்றத் தாக்கங்களைக் கட்டுப்படுத்தலாம். ஒட்சிசன் கூடிய செறிவில் உள்ள இடங்களில் ஏற்படும் மென்சவ்வு அழிவினை இது தடுக்கிறது

**III) இயல்புகள்:-**

ஒட்சிசன் இல்லாத பொதுவெப்ப உறுதியானது.

**IV) குறைபாடுகள்:-**

செங்குருதிக்கலங்கள் அதிகளவில் சிதைவடையும்.

(தொடரும்)

# மது அருந்தும் பழக்கம் மனநோயாக மாறுகிறது

மேலை நாடுகளில் குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் வாகனம் ஓட்டும்போது ஓட்டுநர்கள் குடி போதையில் இருப்பதால், சுமார் 25,000 பேர் ஒரு வருடத்தில் இறக்கின்றனர் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இது தவிர, குடி போதையில் சுமார் 15,000 பேர் கொலைக்கும், தற்கொலைக்கும் ஆளாவதாகவும், சுமார் 25,000 பேர் பல்வேறு நோயுற்று இறப்பதாகவும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உலகச் சனத்தொகையில் நான்கு கோடி மக்கள் இதனால் அவதியுறுகின்றனர்.

குடிப்பழக்கம் என்பது, ஒருவனது நடத்தையில் ஏற்படும் மாறுபாடே ஆகும். பிறந்து வளர்ந்தது, மது அருந்தவே என்பது போல, இவர்கள் எப்போதும் குடித்துக் காலங் கழிப்பது மட்டுமல்லாமல், தங்களது உடல் நலத்தையும், மனநலத்தையும் கெடுத்துக் கொள்கின்றனர். நாளடைவில், மது அருந்தாமல் ஓரிரு நாட்கள் இருந்தாலும் உடலிலும், உள்ளத்திலும் பல்வகை நோய் அறிகுறிகள் தோன்றி மிகுந்த அவதிக்கு ஆளாகின்றனர். அந்த அளவிற்கு இவர்கள் மது அரக்கனுக்கு அடிமையாகி விடுகிறார்கள். மனநலம், உடல்நலம் மற்றும்சமூக, பொருளாதார நிலைகளைப் பாதிக்கும் அளவிற்கு முறையற்றுக் குடிப்பதையும், குடிக்கும் அளவைக் கட்டுப்படுத்துந் திறனை இழப்பதையும், மதுவை விலக்க முடியாமல் தினமும் குடித்தலையும்தான் மதுவடிமை எனக் கொள்ள வேண்டும். முதலில் நண்பர்களுக்காக எனச் சிறிதளவு மது அருந்தும் பழக்கமே, நாளாவட்டத்தில் மதுவடிமை நிலைக்குக் கொண்டு செல்லும்.

## மதுப்பழக்கம் தோன்றக் காரணங்கள்.

பால் அருந்தும் பருவத்தில் ஏற்படும் பல விதமான ஏக்க உணர்வுகளும், ஏமாற்றங்களும், பிற்காலத்தில் குடிப்பழக்கத்திற்கு வழிகோலுகின்றன எனக் கருதப்படுகிறது. வாழ்க்கையில் ஏற்படும் கசப்பான சில அநுபவங்களை மறந்து வாழவும், அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் இக் குடிப் பழக்கம் உதவுகிறது என அவர்கள் கருதுகின்றனர். குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் கண்டிப்பும், சட்டதிட்டங்களும் குழந்

தையின் மனதில் பெற்றோருக்கு எதிரான கோபத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்துகின்றன. ஆனால், அவற்றைப் பெற்றோரிடம் அவர்கள் வெளிக் காட்டுவதில்லை. காரணம், அவ்விதமான கோபத்தின் விளைவால் பெற்றோருக்குத் தீங்கு ஏற்பட்டு, அதனால் அவர்களை இழக்க நேரிடும் என்ற பயம்மனதில் உண்டாவதே பின்பு வளர்ந்து பெரியவர்கள் ஆனதும், குடிப்பழக்கம் அவர்களது ஆசைகளை நிறைவேற்றவும், பழி உணர்வைத் தீர்த்துக்கொள்ளவும் உதவுகிறது.

சமூக விரோதச் செயல்களில் இறங்கவும், பகைமை உணர்வை வளர்த்துக்கொள்ளவும், சாராயம் போன்ற மதுபானங்கள் அவர்களுக்கு மிகவும் கை கொடுக்கின்றன. சிலருக்குச் சில சமயம் ஏற்படும் குற்றவுணர்வுகளை மறக்கவும் மது உதவுகிறது. இது தவிர, தவிர்க்க முடியாத அளவிற்கு மனதில் தோன்றும் தாழ்வு மனப்பான்மையும், பொறுப்புக்களில் இருந்து தப்பிக்கொள்ளவிரும்புவதாலும் இக்குடிப்பழக்கத்திற்கு அடிமையாக, சில முக்கியமான காரணங்களாகும்,

இப்பழக்கத்திற்குப் பாரம்பரியமும் சூழ்நிலைகளும், சமூகப் பண் பாடுகளும், நண்பர் குழாமின் வற்புறுத்தல்களும் தூண்டுகோலாக அமைகின்றன. இவை தவிர, குடும்பத்தில் பெற்றோர் அல்லது உடன் பிறந்தோர் குடிப் பழக்கம் உடையவராயின், மற்றவரும் அப்பழக்கத்திற்கு ஆளாகலாம்.

## மதுவும் மனநிலையும்

மது பொதுவாக மனிதனது உடலுக்குத் தீங்கு செய்யும் ஒரு நச்சுப் பொருள் ஆகும். அளவிற்கு அதிகமாக ஒருவன் அதை அருந்தினால் மூளை முதலிற் பாதிக்கப் படுகின்றது. இதனால் அவன் மன நோயுற்றவனைப் போல நடந்து கொள்கிறான், இரத்தத்திற் சேரும் மதுவின் அளவிற்கு ஏற்ற படி மனிதனது மனநிலை மாறுபாடு அடைகிறது. சிறிதளவு மது அருந்தியவுடன் ஒருவிதக் கேளிக்கை மனப்பான்மையும், போலியான மனமகிழ்ச்சியும் ஏற்படுகின்றன. பேச்சின் அளவும் அதிகரிக்கின்றது. இன்னமும் சிறிது மது அருந்தினால், கொஞ்ச நேரத்தில் ஒருவித மனக்குழப்பம் ஏற்படுகின்றது. பேசுமபேச்சு மேல்எழுந்த வாரியாக – உண்மை குறைந்து–பொருளற்றதாக அமைவதோடு மட்டுமன்றி, எடுக்கும் தீர்மானங்களும் முடிவுகளும்முறை யற்றவையாக இருக்கும். சொல் லும் கருத்துக்கள் தொடர்பு இல் லாமலும், பொருத்தமற்றும் இருக் கும். இரைச்சலாகப் பேசுவது

டன், தான்மிகவும் சக்தி வாய்ந்தவன் என்றும், தன்னால் எதையும் சாதிக்கமுடியும் என்றும் சொல்வார்கள். உண்மையில் எல்லா விதமான திறமைகளும் அப்போது குறைந்தே இருக்கும். உல்லாசமான ஒரு நிலையில் இருந்து சிறிது சிறிதாக எரிச்சல் உணர்வும், தற்பெருமைநிறைந்த திமிரான மனப் போக்கும், அடக்கம் குறைந்த ஆரவாரமும், கூச்சமின்மையும் ஏற்படுகின்றன. சமூகத்திற்கும், சுற்றுப்புறச்சூழ்நிலைக்கும் இடையூறாகக் குடிகாரன் அமைகிறான்.

மதுப்பழக்கத்தினால் ஏற்படும் மேலும் பல உளவியற் பாதிப்புக்களை, தொடர்ந்து அடுத்த இதழிற் பார்ப்போம்.

— சசி

# இயற்கை ஒலிகளின் காப்பகம்

இயற்கையின் ஒலிகளைப் பதிவுசெய்து ஆவணப்படுத்த அமெரிக்காவில் 'லைப்பிரரிகள்' இருக்கின்றன. இவற்றில் பணிபுரிபவர்கள் நுட்பமான ஒலிப்பதிவுச் சாதனங்களுடன் காடு, மலைகள் எல்லாம் அலைந்து ஒலிகளைப் பதிவு செய்கின்றனர்.

''இயற்கை ஒலிகள் கூட, சரித்திரக் குறிப்புக்கள் போன்றவை. ஒரு காலத்தில் ஓர் இடத்தில் என்ன நடந்தது? என்பதைப் போலவே, 'என்ன ஒலி கேட்டது?' என்பதும் முக்கியமானது'' என்கிறார் இயற்கை ஒலிப்பதிவாளரான கிறெக் பட்னி என்பவர்.

எங்கு பார்த்தாலும் காடுகளும், அமைதியான புல்வெளிகளும், அவற்றில் வாழும் பலவிதமான இனிய பறவைகளும் கூட அழிந்து வருகின்றன அவற்றைப் புகைப் படம் எடுத்து வைத்தாலும், அவற்றைப் பற்றிய கட்டுரைகள் எழுதி வைத்தாலும், அவற்றின் குரலை எம்மால் கேட்க முடியாது. அதனால், அவற்றின் குரல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுகின்றன.

மழையின் ராகம், இடியின் தாளம், புயலின் ஓசை போன்றவற்றையும், பனி மலைகள், மழைக் காடுகள் என அந்தந்த இடங்களுக்கே உரித்தான இயற்கையான ஒலிகளையும் பதிவு செய்து, அமெரிக்காவில் ஆவணப்படுத்தி வைக்கின்றார்கள்.

வானம் இன்று மிக அமைதியாக இருக்கிறது. விமானங்கள் இரண்டு விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டபின்னர், எங்கள் வானம் அழகாகவும்கூடக் காணப்படுகிறது.

மூன்றாம் ஈழப்போரின் வெற்றிகரத் தொடக்கத்திற்கான 'பிள்ளையார் சுழி' வானிலேயே எழுதப்பட்டு விட்டது.

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர். விமானம் வீழ்ந்ததுமே, தமிழர் மானம் விண்ணை முட்டிவிட்டதாகக் கவிஞர்கள் ஆனந்தக்கூத்தாடுகின்றனர்.

இந்த விமானங்களினால் கொல்லப்பட்டுக் குலை குலையாக உறவுகளை இழந்த நெஞ்சங்கள் சற்று ஆறுதல் பெறுகின்றன.

இவ்வேளையில், இரண்டாம் ஈழப்போரின் காட்சிகள் சில கண்முன்னே வந்து நிற்கின்றன.

வான்வெளி முழுவதையும் விமானங்கள் ஆட்சி புரிந்த காலமது. மக்களின் தினசரி வாழ்வு பதுங்கு குழிகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்த நாட்கள்!

விமானக்குண்டுகளால் மரணமானோரின் செய்திகளே நாளிதழ்களில் தினசரி வரும் தலைப்புச் செய்தி!

விமானங்களின் பெயர்களும், அவற்றின் செயற்பாடுகளும் சின்னஞ் சிறுவர்களுக்கும் கூட மனப்பாடம்.

''ஆ... அங்க பார் ஆறு பொம்மர் ஒண்டா வருது. இண்டைக்குத் துலைக்கப் போறான்''

''ஓ... பதியிறான், பதியிறான் எல்லோரும் கீழே படுங்கோ''

# கால மாற்றம்

*— விவேக் —*

''சகடை வருது கவனம். பங்கருக்குள்ளே ஓடுங்கோ... அந்த மூலையில் குண்டைத் தள்ளினானென்டால் இஞ்ச வந்து விழும். கண்டுபிடிக்கிறது கஷ்டம்''

''அம்மா ஆறுகுண்டையும் போட்டுட்டான். இனி இல்லை. அடுத்ததை ஏற்றிக் கொண்டு வாற துக்குள்ள சாப்பிடுவம்; பசிக்கிறது''.

''ஐயோ அங்கை குண்டு போட்ட இடத்தில பெரிசா புகையாக்கிடக்கு. எத்தனை பேர் செத்திச்சினையோ பாவம்''

''என்னவாம் தம்பி எங்கையாம் விழுந்தது?''

''ஆறுமுகத்தார் வீட்டிலை. எல்லோரும் வீட்டோடை சரியாம்''

''ஐயோ''

அந்த நாட்களில் மக்களது வாழ்க்கை நாடகத்தின் உரையாடல்கள் தாம் இவை!

'லாண்ட் மாஸ்ரர்' சத்தம் கேட்டால் நெஞ்சுக்குள் இடிக்கும்!

நிலவு வந்தால் அன்றிரவு நித்திரை வராது. நிலவு வெளிச்சம் என்றால், உயிர் கொத்திப் பறவைகளுக்கு அன்று அட்டகாசம் தான்!

இன்று–இவ்வேளையில்–இந்த வானத்து அசுரர்கள் வீழ்ந்தழிந்த நிகழ்வையொட்டி இருபத்தொன்பது தமிழீழக் கவிஞர்கள் மனங்களில் கிளர்ந்தெழுந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடாக 'வானம் எம்வசம்' என்ற கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது.

விமானம் வீழ்ந்த ஒரே மாதத்திற்குள் அதே தினத்தில் இந்த நூலின் வெளியீட்டு வைபவம் நடைபெற்றது.

யாழ் கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வு வித்தியாசமானதாக அமைந்தது. இரண்டாவது விமானம் வீழ்ந்தபோது சிதைந்து அழிந்த வீட்டின் உரிமையாளர் மங்கள விளக்கினை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

நூலின் சிறப்புப் பிரதிகள், கடந்த காலங்களில் விமானத் தாக்குதல்களால், உறவினர்களைப் பலி கொடுத்தவர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டு வழங்கப்பட்டன.

சகோதரர்களை இழந்த இளம்பெண் – பெற்றோரை இழந்த பிள்ளை–கணவ்னையும் குழந்தைகளையும் இழந்த பெண்-என விபரங்கள் அறிவிக்

கப்பட்டு அவர்கள் அழைக்கப்பட்டபோது சபையோரின் விழிகள் கலங்கின.

இந்த நிகழ்வு, இழப்புக்களைச் சந்தித்த மனங்களுக்குச் சற்று ஆறுதலாகவும், புதிய நம்பிக்கைகளைத் துளிர் விடச் செய்வதாகவும் அமைந்திருந்தது.

விமானத்தாக்குதல்களை மையமாக வைத்து அண்மையில் 'புதிய உதயம், என்றோர் ஒளி நாடா விவரணப் படமும் உருவாக்கப்பட்டுள்ளது.

'நிதர்சனம்' நிறுவனம் இதனை உருவாக்கியுள்ளது.

பார்ப்பவர்களின் உணர்வலைகளைப் பொங்கியெழச் செய்யும் விதமாக, மிகுந்த கலைநேர்த்தியுடன் இந்த ஒளிநாடாவிவரணப் படம் அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் மண்ணில் நடத்தப்பட்ட சிறிலங்கா அரசின் விமானத்தாக்குதல்கள் – அத்தாக்குதல்களின்போது குருதிச் சேற்றில் சிதைந்து கிடக்கும் உடல்கள் – அங்கங்களை இழந்து துடிக்கும் மனிதர்கள் அருகே நின்று கதறியழும் உறவினர்கள் என, அவ்வப்போது படம்பிடிக்கப்பட்ட காட்சிகள் நுட்பமாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

காட்சிகளின் பின்னணியில் ஒலிக்கும் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் கவிதை வரிகள் மனதை நெருடுகின்றன. இக்காட்சிகளின் முடிவாக –இந்த அவலங்களுக்கெல்லாம் காரணமான விமானங்களில் இரண்டு விழுந்து கிடக்கும் காட்சியும் விமானப் படையினரின் சிதைந்த உடல்களும் காட்டப்படுகின்றன.

இந்தப் போராட்ட நடவடிக்கைகளின் நியாயப்பாட்டினை உலகில் எவராலும் மறுக்கமுடியாது என்பதற்குச் சிறந்த சான்றாக-சிறந்த ஆவணமாக– இந்த ஒளி நாடா விவரணப்படம் திகழும் என்பதில் ஐயமில்லை.

கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் கூறிய ஒரு வார்த்தை இப்போது ஞாபகத்தில் வருகிறது.

''உலகின் பல தலைவர்கள் காலத்தால் உருவாக்கப்பட்டவர்கள். ஆனால், பிரபாகரன் அவர்கள் இங்கு ஒரு காலத்தை உருவாக்கிய தலைவன்!''

எங்கள் மண்ணும், கடலும், வானும் எதிரியின் மூச்சுக்காற்றும் கலக்காத காலம் ஒன்று விரைவில் வரும் என நம்புவோம்.

# பகலவன் பதில்கள்

சு. பாரதி
கைதடி

நிறையச் சஞ்சிகைகள் எங்கள் பாடசாலைக்கு வருகின்றன. அவற்றில் எதனை வாங்குவது எனக் குழப்பமாகவுள்ளது; என்ன செய்யலாம்?

எல்லாச் சஞ்சிகைகளையும் ஒரு முறை வாசித்துப் பாருங்கள். உங்களுக்குப்பிரயோசனம் என்று கருதுவதை, உங்களுக்குப் பிடித்தமானதை வாங்குங்கள். இதிலென்ன குழப்பம்?

கே. குமார்
நல்லூர்

தர்மம் என்றால் என்ன?

'தாழ்ந்து கிடப்போரைத் தற்காப்பதே தர்மம்'

மு. இராஜேஸ்வரன்
மட்டுவில்

சிறிலங்காவின் விமானங்கள் தமிழீழ வான்பரப்பில் இனி மேல் பறக்காதா?

சிலசமயம் பறக்கலாம். பறந்து, மீண்டும் எரிந்து விழலாம்.

செ. கணேசமூர்த்தி
கிளிநொச்சி

பதவிக்காகச் சிறிலங்கா அரசாங்கத்தில் இருந்துகொண்டு தமிழர் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் தமிழரை எவ்வாறு அழைப்பது?

கோடரிக்காம்புகள்.

செ. கமலநாதன்
இணுவில்

பகலவனாரே! பழமொழி ஒன்று கூறுங்கள்?

☐ ''பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை உங்களால் தடுக்கமுடியாது. ஆனால் உங்கள் தலையில் அவை கூடுகட்டாமல் தடுக்க முடியும்'' இந்தப் பழமொழியைக் கூறிய அறிஞர் பெயர் ஞாபகத்தில் இல்லை.

ப. கமலினி
கோப்பாய் வடக்கு

சிறிலங்காவின் புதிய சனாதிபதி எப்படியும் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கண்டிருப்பார். கொஞ்சம் நாங்கள் பொறுத்திருக்கலாம் என்று சில புத்திஜீவிகள் கூறுகிறார்களே; அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

☐ புத்திஜீவிகள் என்று சொல்லப்படுகின்ற எம்மவர்கள் சிலர் வெறும் புத்தக ஜீவிகளாகவே வாழ்கின்றனர். வாழ்க்கையையும், போராட்டத்தையும் கூட இவர்கள் படித்தறிதல் அவசியமானது.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுக்கள் நடத்திய காலத்திலேயே போருக்கான தயாரிப்புக்களையும் செய்ததாகச் சனாதிபதி சந்திரிகாவே இப்போது பகிரங்கமாக ஒப்புக்கொண்டு விட்டார். புத்திஜீவிகள் இதைப் பற்றி என்னகூறுகிறார்கள் என்று கேட்டுப்பாருங்கள்.

# தியாகத்தின் முகங்கள்

உன்னத இலட்சியத்திற்காய்
உருகிடும் மெழுகுகளே!
உங்கள் முகங்கள்
உருக்குலையாது.

ஈகத்தின்
வேர்கள் நீங்கள்!
இனியும் இனியும்
உங்கள் வேர்களிலிருந்து
வெடித்தெழும்
வீரியமான புதிய தளிர்கள்!

—செல்வி—

கடந்த இதழ்
ஓவியத்திற்கான
கவிதை

# பொது அறிவுப் போட்டி-11

(1 எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு இங்கே நடைபெற்றது?
(i) மலேசியா
(ii) தஞ்சாவூர்
(iii) டில்லி

2) மார்ச் எட்டாம் திகதி கொண்டாடப்படுகின்ற நிகழ்ச்சி எது?
(i) மாவீரர் நாள்
(ii) தேசிய வீரர் தினம்
(iii) சர்வதேச மகளிர் தினம்

3) செய்மதி இதன் மூலமாக விண்வெளிக்கு அனுப்பப்படுகிறது.
(i) விமானம் மூலம்
(ii) ஏவுகணை மூலம்
(iii) 'றொக்கட்' மூலம்

4) 'Galaxy' என்று இதனை அழைக்கிறார்கள்.
(i) வால்நட்சத்திரத்தை
(ii) செவ்வாய்க் கிரகத்தை
(iii) ஆகாயகங்கையை

5) சூரியன் தோன்றி இத்தனை ஆண்டுகள் கடந்து விட்டனவாம்.
(i) 450 கோடி ஆண்டுகள்
(ii) 300 கோடி ஆண்டுகள்
(iii) 1000 கோடி ஆண்டுகள்

9) நிலவில் இருப்பதாக விஞ்ஞானிகளால் கூறப்படும் உலோகம் இது.
(i) அலுமினியம்
(ii) தங்கம்
(iii) இரும்பு

7) இலங்கையில் கொழும்பு நகரம்தான், இந்த உற்பத்திப் பொருளை ஏலம் விடுவதில் உலகிலேயே முதலிடம் வகிக்கிறது.
(i) கோப்பி
(ii) இறப்பர்
(iii) தேயிலை

8) 'ஒளிபுகும்பாதை' (Shining Path) என்பது
(i) விலையுயர்ந்த கல்
(ii) பெரு நாட்டு விடுதலை அமைப்பு
(iii) விமான நிலையம்

## பொது அறிவுப்போட்டி 10 இற்கான விடைகள்

(1) இரண்டாம் உலகப்போரின் போது பிரித்தானியப் பாரிய கடற்படைக்கப்பலைத் தற்கொலை மூலம் தகர்த்த வீரனான சுசுக்கி ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவன்.

(2) விண்வெளிக்கு முதன் முதலாக அனுப்பி வைக்கப்பட்ட செய்மதியான 'ஸ்புட்னிக்' ரஷ்யா நாட்டினுடையது.

(3) தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடைய விடுதலைப் போராட்டம் பற்றிய பேட்டியை முதன்முதலில் பிரசுரித்த ஏடு சண்டே (Sunday)

(4) உலகில் இராணுவப் பாதுகாப்பிற்காக மிகவும் குறைந்தளவில் செலவு செய்யும் ஒரு சில நாடுகளில் ஒன்று சுவிற்சலாந்து.

(5) விண்வெளியில் முதன் முதலில் நடந்த பெண் மணி. ஸ்வெல்த்லேனா சவித்ஸ்கயா ஆவார்.

(6) உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வித்திட்டவர் எனப் போற்றப்படுபவர் தனிநாயகம் அடிகள்.

(7) உயரமான ஓடத்தில் இருக்கும்போது பயப்படுகின்ற உளநோயை (Acro Phobia) என்று

(8) மகளிர் ரெனிஸ் விளையாட்டில் முடிசூடா ராணியாகத் திகழ்ந்த மார்ற்ரினா நவரட்ணலோவா அமெரிக்க நாட்டவர்.

சரியான விடைகளை எழுதியவர்களில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு 250 ரூபாவைப் பெறுபவர்**

குமாரசாமி ஜெகதீஸ்வரி
முருகன் கோவிலடி
மறவன் புலோ
கைதடி, நாவற்குழி.

**இரண்டாம் பரிசு 150 ரூபாவைப் பெறுபவர்**

அ. ராஜ்குமார்
(ஆண்டு 9)
உடுப்பிட்டி அமெ. மிசன் கல்லூரி
உடுப்பிட்டி.

**மூன்றாம் பரிசு 100 ரூபாவைப் பெறுபவர்**

இரத்தினசபாபதி வைத்திலிங்கம்
யாழ். இந்துக்கல்லூரி.

சாளரம் வழங்கும் இப்பரிசில்களைச் 'சாளரம்' அலுவலகத்தில் சனிக்கிழமைகளில் பகல் 12மணிக்கு முன்னதாக வந்து பெற்றுக்கொள்ளலாம். நேரில் வரமுடியாதவர்கள் கடிதம் மூலம் எம்முடன்

சுவையான, தரமான, சுகாதாரமான
வெதுப்பக உற்பத்திகளுக்கு
'தீன்சுவை வெதுப்பகம்'



தீன்சுவை வெதுப்பகத் தயாரிப்புக்களை
ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்.
பின்பு மறக்கமாட்டீர்கள்

தீன்சுவை வெதுப்பகம்
108,
பிரதான வீதி,
பருத்தித்துறை.

நம்பிக்கை!

பாதுகாப்பு!!

உத்தரவாதம்!!!



பேருந்துச் சேவை

விசேட பேருந்துச் சேவை

பொதிசுமக்கும் ஊர்திச் சேவை

## தமிழீழ போக்குவரவுக் கழகம்

*பருத்தித்துறைச் சாலை,*
*கல்வியங்காடு.*

பொதி சுமக்கும் பகுதி,
*செட்டிச் சாலை,*
*நல்லூர்.*